# கண்ணன்

1587

குழந்தைகளின் பத்திரிகை



# செய்திகள்

## படத்தில் ஒரு புதுமுறை

'டைனமிக்' பிரேம் என்று ஒரு புதுவித படக்காட்சி முறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதில் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி திரையின் பரப்பும் உருவமும் மாறுகிறதாம். உதாரணமாக அகன்ற திரையில் ஒரு மூலேயில் சிறுவன் ஒருவன் நிற்கிருன் என்ருல், திடீரென்று அவனைச் சுற்றி ஒரு தோட்டம் சூழும் காட்சி தெரிகிறது. அதன் மத்தியில் சிறுவன் ஒரு புள்ளியளவில் காணப்படுவான். திசை தப்பி அவன் திண்டாடுவதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாமாம். மற்ருெரு உதாரணம்: ஜன நடமாட்டம் இல்லாத சந்தில் அந்தச் சிறுவன் நடந்து செல்கிருன். திடீரெனப் படமும் சந்து மாதிரிக் குறுகிவிடுகிறது. அகன்ற திரையில் அடைபட்டதுபோல் பையன் திணறுவதை நன்ருக நாம் தெரிந்துகொள்ள முடியுமாம்.

## குழந்தைகள் க்ஷேம நலம்

குழந்தைகள் க்ஷேம நலம் என்பதுபற்றி, டில்லி அகில இந்திய ரேடியோவில் ஒரு பிரசங்க வரிசையை ஒலி பரப்புகிருர்கள். அந்த வரிசையில் நம் நாட்டில் இதற்காகச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள்பற்றி ஸ்ரீமதி இந்திரா காந்தி (நேருவின் குமாரி) பேசினுர்.

## யு. எஸ். நீதிபதி

சமீபத்தில் சென்னைக்கு, அமெரிக்க நாட்டுத் தலைமை நீதிபதி எர்ல் வாரன் என்பவர் விஜயம் செய்திருந்தார். அவர் ஒரு கார் ரிப்பேர் கடையில் வேலை பார்த்து, ஜீவனுேபாயத்தை ஆரம்பித்தவராம். பெரம்பூர் கோச்சுப் பாக்டரியைப் பார்வையிட்டபோது அவரே வெளியிட்ட தகவல் இது.

## கிரிக்கெட்

இங்கிலாந்துக்கும் ஆஸி கோஷ்டிக்கும் லண்டன் ஓவல் மைதானத்தில் கடைசி ஐந்தாவது டெஸ்ட் மாட்சு நடைபெறுகிறது. ஆஸி 198 ரன்களும் இங்கிலாந்து 247 ரன்களும் எடுத்திருந்தன. கடைசியில் டெஸ்ட் 'டிரா'வாக முடிந்து இங்கிலாந்துக்கு ரப்பர் கிடைத்தது.

## மாணவர் மன்ற விழா

சென்னை ஸேவா ஸதனம் தாம்பரம் உயர்நிலேப் பள்ளியில் சென்ற மாதம் தமிழ் மாணவர் சங்க ஆரம்ப விழா கண்ணன் ஆசிரியர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

## பாலர் படம்

பாலர்களுக்காக 'ஹம் பஞ்சி ஏக் தால்கே' (ஒரே கிளைப் பறவைகள் நாம்) என்ற ஹிந்திப் படத்தை ஏ. வி. எம். ஸ்தாபனம் சென்னையில் தயாரிக்கவிருக்கிறதாம்.

# கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 17

1-9-'56


| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| கன்னங் கருங்காகம் | .. | 3 |
| விஞ்ஞானம் பேசுகிறுர்! | .. | 4 |
| சைனு சு - சூ! | .. | 7 |
| புதுப் புத்தகம் | .. | 13 |
| குப்பையில் கிடந்தது | .. | 17 |
| தேவை..? | .. | 23 |
| ஏற்ற இடம் | .. | 25 |
| பகவத் கீதா | .. | 29 |
| தெனுலிராமன் | .. | 34 |
| பாலர் கவியரங்கம் | .. | 36 |
| புலிக்குட்டி | .. | 37 |
| எங்கள் யோசனைகள் | .. | 40 |

அட்டைப் படம்-
(போட்டோ) N. ராமகிருஷ்ணு
செய்திகள் - 2 - அட்டை.


வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## புத்தக விமரிசனம்

### அண்ணனும் தங்கையும்

கிட்டு அண்ணன். பட்டு தங்கை. இருவரும் படு சுட்டிகள். ஒருவரை ஒருவர் மிஞ்சும் விஷமத்தனத்தால் அவர்களிடையே போட்டாப் போட்டிகள் ஏற்படுகின்றன. பொல்லாத பூனை வருகிறது. பம்பாய் மாமா வருகிருர். உணர்ச்சி யூட்டும் ஒவ்வொரு சம்பவத்தையும் வெகு அழகாகச் சித்திரித்துக் காட்டுகிருர் ஆசிரியர் அங்கு. மற்றும் இரு அருமையான கதைகளும் அழகான அட்டைப் படமும் சிறுவர்களைக் கவர்ந்து விடும் என்பதில் சந்தேகமே இல்லை. விலை 1 ருபாய்தான். கிடைக்கும் இடம்: வானதி பதிப்பகம், சென்னை 17.

### இன்ஸ்பெக்டர் மகள்

இன்ஸ்பெக்டரின் மகள் வாஸந்திக்கு ஆறு வயதில் தாய் இறந்து விடுகிருள். முதலில் அன்பாக வளர்த்து வந்த சித்தி கோபு பிறந்ததும் அவள்மீது வெறுப்புக் கொள்கிருள். நள்ளிரவில் வெளியேறிய வாஸந்தி ரெயில் விபத்தில் சிக்கி, அதிலிருந்து தப்பித்து கிராமத்தில் வசிக்கும் போது ரமணி வந்து அவளைச் சென்னைக்கு அழைத்துச் செல்கிருன். திடீரென்று தனக்குக் கிடைத்த 'பாக்கர்டு' கார், பங்களா வாசம்-எல்லாவற்றையும் கண்டு முதலில் அவள் திகைக்கிருள். ரஸமான கதைப் போக்கும் எளிய தெவிட்டாத நடையும் அழகான அட்டைப் படமும் கொண்ட அருமையான புத்தகம். 'ரெயில் திருடன்' என்ற ரஸமான மற்ருெரு குறு நாவலும் அடங்கியது. விலை ரூ. 1-0-0. ஆசிரியர் ராஜன். கிடைக்குமிடம்: வானதி பதிப்பகம். தி. நகர் - சென்னை - 17.

# குழந்தைகளே!

கண்ணனைப் பற்றி உங்கள் கருத்துக்களையும் கண்ணனில் நீங்சள் விரும்புகிற மாறுதல்களையும் பற்றித் தெரிவிக்கும்படி முன்பு கேட்டிருந்தேன். கண்ணன் உங்களோடு கடந்த ஆறு ஆண்டுகளாக நெருங்கிய தொடர்புகொண்டிருக்கிறான். உங்களுக்கு உற்ற தோழனாகவும் ஆசானாகவும் இருந்து வருகிறான். இனியும் அவ்விதமே இருக்க ஆசையும் கொண்டிருக்கிறான். உங்களுக்கு இனிய கதைகள் சொல்லி, அருமையாகப் பாட்டுக்கள் இசைத்து, பல விஞ்ஞானப் புதுமைகளை விளக்கி, பொழுதுபோக்கவும் அதே சமயத்தில் அறிவை வளர்க்கும் பல ஆட்டங்களைக் காட்டி, நாட்டு வரலாறுகளையும் ஊரின் பெருமைகளையும் வீரதீரர்களின் செயல்களையும் எடுத்துக் காண்பித்து வந்துகொண்டிருக்கிறான். கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய சித்திரங்களும் புகைப் படங்களும் வெளியிட்டு வந்திருக்கிறான். உங்களுடைய திறமைகளை வெளிக் காட்டி, பெருமையுறத் தக்க போட்டிகளையும் நடத்தி வருகிறான். இவ்வளவு எல்லாம் செய்தும் இன்னும் கண்ணனுக்குத் திருப்தி உண்டாகவில்லை. இன்னும் பல பல அரிய விஷயங்களைச் சொல்லி உங்களை மகிழ்ச்சியடையச் செய்வதுதான் அவன் ஆசை.

பலர் இப்போது தங்கள் யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். பெரும்பாலும் கண்ணனை வாரப் பத்திரிகையாக்க வேண்டும் என்ற கடிதங்களே இருக்கின்றன. அதைத் தவிர, தங்களுக்கு இன்ன இன்னவை வேண்டும், இன்ன இன்னவைகளை வெளியிடுங்கள் என்று அநேகமாக யாரும் எழுதவில்லை. சிலர் முன்பு கண்ணனில் வெளிவந்த பகுதிகளையே மீண்டும் தொடங்கும்படி கேட்டிருக்கிறார்கள். இதை வேறுவிதமாக மாற்றியமைத்து வெளியிடலாம் என்று எண்ணுகிறேன்.

இதெல்லாம் போதாது. உருவாக, திட்டமாக ஏதாவது யோசனைகளைச் சொல்வீர்கள் என்று தினமும் உங்கள் கடிதங்களைப் பார்த்து வருகிறேன். அப்படி எதுவும் காணோம். ஏதோ ஒன்று இரண்டு நடு நடுவே இல்லாமலும் போய்விடவில்லை. அப்படிப்பட்ட கடிதங்களில் சிலவற்றை இந்த இதழில் வெளியிட்டிருக்கிறேன். இந்தப் பகுதிக்கு மீண்டும் எல்லாரும் எழுதியனுப்புங்கள்.

உடனடியாக ஒரு விமரிசனப் போட்டி ஒன்று வைக்கப் போகிறேன். இதனால் எங்களுக்கு ஒரு லாபம் உண்டு என்பதை ரகசியமாகச் சொல்லி விடுகிறேன். ஆனால் அதே சமயத்தில் நீங்கள் எவ்வளவு தூரம் ஒரு புத்தகத்தைப் படித்து மதிப்பிடுகிறீர்கள் என்பது எல்லாருக்கும் தெரியும். உங்கள் விமரிசன சக்தி இதனால் மிகவும் வலுவடையும். கண்ணனில் இரண்டு பக்கங்களுக்குமேல் போகாமல் 'லீடர் மணி' என்ற புத்தகத்தைப்பற்றி விமரிசனம் எழுதவேண்டும். பாராட்டித்தான் எழுத வேண்டும் என்று எழுதாமல் மனசில் உண்மையாகப் படுவதை எழுத வேண்டும். செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள் எழுதியனுப்பிவிடுங்கள்.

தொடர்கதைப் போட்டிக்கு இன்று வரையில் நூற்றுக்குமேல் கதைகள் போல வந்திருக்கின்றன. முடிவுத் தேதிக்குள் இன்னும் பல வரும் என்று எண்ணுகிறேன். இந்தக் கதைகளை ஒரு பஞ்சாயத்துக் குழு பரிசீலனை செய்து, சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுக்கும். பஞ்சாயத்தார்களின் பெயர்களைப் பின்னர் தெரிவிப்போம். தொடர்கதைப் போட்டியின் முடிவை நவம்பரில் தெரிவிக்கலாம் என்று எண்ணுகிறேன்.

ஆசிரியர்

# கள்ளக் கருங் காகம்!

‘சசிதேவன்’



கன்னங் கரிய காகமே!
கள்ளக் கருங் காகமே!
என்ன காரணத் தினால்
எத்தித் திரிந்து வாழ்கிறாய்?

சின்னஞ் சிறுவர் ஆசையாய்
சீடை, முறுக்கு, தேன்குழல்
தின்னும் போது மெல்லநீ
திருடிக் கொண்டு போகிறாய்!

என்ன செயல், உன் செயல்!
ஈனச் செயல் அல்லவோ?
தின்னும் பண்டம் போனதால்
தேம்பிச் சிறுவர் அழுகிறார்.

கன்னங் கரிய காகமே!
கள்ளக் கருங் காகமே!
உன்னைப் போன்ற திருடர்கள்
உலகில் யாரும் இல்லையே!

கறுத்த உடல் கொண்டநீ
கறுத்த மனசும் கொண்டதால்,
வெறுத்த மக்கள் உன்னையே
விரட்டி அடிக் கின்றனர்!

7



இதற்குக் 'குத்துக் கவட்டை' (Vertical fork) என்று பெயர். ஆனால், இது அடிக்கடி குட்டிக்கரணம் போடும்.

பிறகு 'ஸ்டார்' (Star) என்னும் ஒரு வகை அமைக்கப்பட்டது. இதில் பின்சக்கரம் பெரிதாகவும் முன்சக்கரம் சிறிதாகவும் இருந்தது. மேலும் பெடலையும் அச்சையும் இணைப்பதற்கு வாரும் (Strap) கொக்கிப் பல்சக்கரமும் (Ratchet wheel) பொருத்தப்பட்டிருந்தன.

பிறகு 1877 - இல் இன்னொரு மாறுதல் ஏற்பட்டது. மார்ஸேல்ஸ் (Marseilles) நகரைச் சேர்ந்த ரூஸோ (Rousseau) என்பவர் சக்கரத்தின் அச்சில் பெடலைப் பொருத்தாமல், வேறாக வைத்துச் சங்கிலியையும் (Chain) அமைத்தார். பல் சக்கரத்துக்குப் பல் சக்கரம் சென்ற சங்கிலி சக்கரத்தைச் சுழலச் செய்ய துணை செய்தது.

8

பிறகு, 1880 - இல் ரோவர் (Rover) என்னும் சைக்கிள் அமைக்கப்பட்டது. அதில் முன்சக்கரம் பின்சக்கரத்தைவிடச் சற்றே பெரிதாக இருந்தது. அதற்குப் பிறகு இக்காலத்தில் காணப்படும், சம அளவுள்ள சக்கரங்களை உடைய சைக்கிள் வகை அமைக்கப்பட்டது. இதற்கு 'பாதுகாப்பான சைக்கிள்' (Safety cycle) என்று பெயர். இது குட்டிக்கரணம் போடாத வகை.



ரோவர் (ROVER)

பிறகு - கட்டி இரும்புச் சட்டத்துக்குப் பதிலாகக் குழாய் அமைப்பு வந்தது. சில ஆர்க்கால்களுக்குப் (Spokes) பதிலாக, கட்டியான மெல்லிய கம்பியால் செய்த ஆரக்கால்கள் பல அமைக்கப்பட்டன. இதனால் பலம் குறையவில்லை; பளு குறைந்தது. பால்பேரிங் (Ball-bearing) வந்ததால் உராய்வு குறைந்தது. பிரேக்கும் (Brake) மணியும் பொருத்தப்பட்டன. ஆகவே சைக்கிளை வேகமாகவும் அபாயமில்லாமலும் விட முடிந்தது. மணிக்கு அறுபது மைல் வேகத்திலும் சைக்கிளில் போகமுடியும்.





**9**

பிறகு, பெண் ஏறிச் சவாரி செய்வதற்கு ஏற்ற சைக்கிளின் சட்டம் (Frame) சௌகரியமாக அமைக்கப்பட்டது.

முதலில் கெட்டி ரப்பரால் செய்த பட்டை அல்லது டயர் (Tyre) போடப்பட்டது. பிறகு, காற்றடைத்த பட்டை—இதைத்தான் டயர், டியூப் (Tube) என்று சொல்லுகிறோம். இதனால் அதிர்ச்சி குறைகிறது.

மூன்றாவது உராய்வு (Fricticn) ஒட்டிய தத்துவம். நாம் வேகமாக விடவேண்டும் என்றால் தடை செய்வது இந்த உராய்வு என்பது. இதைக் குறைப்பதற்காகத் தான் சைக்கிள் சக்கரத்தில் நன்றாகக் காற்றடைக்கிறோம். சைக்கிளுக்கு எண்ணெய் போடுகிறோம். அதில் பால்-பேரிங் (Ball-bearing) என்னும் உருளைத் தாங்கிகள் அச்சைச் சுற்றி வைத்திருப்பதும் இதற்காகத்தான்.



சைக்கிளின் பல் சக்கரங்களும், சங்கிலியும்



அச்சைச் சுற்றி வைத்துள்ள உருளைத் தாங்கிகள்.

**10**

உராய்வு இல்லாவிட்டால் பிடிப்பே இருக்காது. பெடல் அமுக்கினால் பெடல் நழுவும். அது நழுவாவிட்டாலும் சுழலும் சக்கரம் தரையில் விர்ரென்று சுழலும். முன்னே செல்லாது. தரைக்கும் சக்காத்துக்கும் உள்ள உராய்வே சைக்கிளை ஓட்டுவதும அதன் வேகத்தைக் குறைப்பதும் உராய்வு இல்லாவிட்டால் ஓடும் சைக்கிளை நிறுத்த முடியாது. 'பிரேக்' (Brake) போட்டாலும் பிடிக்காது. பிடித்தாலும் சக்கரம் தரையில் நழுவிக் கொண்டே வழுக்கி ஓடும்.





மூன்று சக்கர வண்டி.


உராய்வே இயக்கத்துக்கும் தடைக்கும் காரணம் என்பது ஒரு விசித்திரமான அற்புதமான உண்மை.
[மூன்று சக்கர வண்டிகளைப் பற்றித் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை. இரண்டு சக்கர வண்டியை விட அது நிலையாக நிற்கும். ஆனால் உராய்வு அதிகம். ஆகவே வேகம் குறைவு.]
இனி சைக்கிளின் அமைப்பில் காணப்படும் சில விஞ்ஞான தத்துவங்களைக் கவனிப்போம்.
முதலாவது தத்துவம் நான் முன்னால் சொல்லியது. அதாவது சுழலும் பொருள் சுழல் தளம் மாறாமல் இருக்கும் என்பது.
11
பெண்கள் சவாரி செய்யும் சைக்கிள்
ஆண்கள் சவாரி செய்யும் சைக்கிள்
12
இரண்டாவதும், திறனை ஒட்டியது. பெரிய பல்-சக்கரத்தையும் சிறிய பல்-சக்கரத்தையும் நேராகவோ, அல்லது சங்கிலியின் மூலமாகவோ. இணைத்தால், பெரிய சக்கரம் கொஞ்சமாக இயங்கினாலும் சிறிய சக்கரம் அதிக தூரம் வேகமாகச் செல்லும் என்னும் கியர் (Gear) தத்துவம்.
நேராக இணைத்த பல்-சக்கரங்கள்,
சங்கிலியால் இணைத்த பல்-சக்கரங்கள்.
நம்முடைய சைக்கிளில் பெரிய சக்கரத்தைப் பெடலின் மூலமாகக் காலால் உதைத்துச் சுழலச் செய்கிறோம், அதோடு இணைத்த சங்கிலி பின்னால் உள்ள சின்ன பல்-சக்கரத்தைச் சுழல வேகமாகச் செய்கிறது. அதோடு இணைத்த பின் சக்கரம் சுழல்கிறது- சைக்கிள் ஓடுகிறது.




ஆர்வி

சீனன் தன் சிற்றப்பன் சின்னப் பக்கிரியையும் சிறிய தாய் காளியையும் பார்த்தவுடன் கலங்கிப் போனான். பழைய பயமும் நடுக்கமும் உண்டாயின. அவர்கள் இரண்டு பேரும் எதற்கும் அஞ்சாதவர்கள். இடம், பொருள், ஏவல் ஒன்றும் பார்க்கக்கூடியவர்கள் அல்ல. அவர்கள் சண்டை போடுவதற்குக் காரணமே வேண்டியதில்லை. அவர்களிடம் பேச்சு வைத்துக்கொள்வதே ஆபத்துத்தான். சத்தம் போட்டு, ஊரைக் கூட்டி, அவமானப்படுத்தி விடுவார்கள். முன்பு என்றால் சீனனுக்கு இந்த மான-அவமானம் ஒன்றும் தெரியாது. ஆனால் இன்று அவன் அப்படி இருக்க முடியுமா? அதையும் தவிர, சீனனுக்கு அவர்களிடம் எதிர்த்துப் பேசியே பழக்கமில்லை. அவன் ஒன்று சொல்ல வருவதற்குள் அவர்கள் ஒன்பதைச் சொல்லிவிடுவார்கள். சொல்ல வருவதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளமாட்டார்கள்.

சீனன் காரில் உட்கார்ந்திருந்த கோலத்தைப் பார்த்ததும் காளி, ''அம்மாடி, யம்மாடி!'' என்று கைகளைக் கொட்டி, மோவாயில் கையை ஊன்றிக் கொண்டாள். சின்னப் பக்கிரி குடைக் கம்பிப் பெட்டியை காரின் மேலேயே கொண்டுவந்து வைத்தான்.

''இவுருக்கு வந்த வாழ்வைப் பாருங்கடி!'' என்று ராகம் போட்டபடி ஆரம்பித்தாள் காளி. அந்த ஒரு வார்த்தையை ஆரம்பப் பல்லவியாக வைத்துக்கொண்டு, கோடை மழை அடித்து ஊற்றுவதுபோல் பேசப் பிடித்துக் கொண்டுவிட்டாள்.

''ஏண்டா, உனக்கு என்னடா வாழ்வு வந்துட்டுது? உன்னை எடுத்து வந்தோமேடா; அநாதையாய்க் கிடந்த உன்னைக் கொண்டாந்து வளத்தோமேடா! ராக் கண் பகல் கண் முளிச்சுக் காப்பாத்தினோமேடா; இன்னிக்குப் பணக்காரனாயிட்டா எங்களை மறந்திடலாமாடா?'' என்றெல்லாம் என்னென்னவோ படபடவென்று பேசினாள்.

''இந்தாய்யா! அந்தக் குடைக் கம்பியை வண்டிமேலே வைக்காதே; எடுய்யா!'' என்று டிரைவர் கோபமாகச் சொன்னான். புத்தம் புது வண்டியின்மீது, ஒட்டைக் குடைக் கம்பியால் கீறினால் அந்த அநாகரீக முட்டாள்தனத்தை யார்தான் சகிப்பார்கள்?

அப்படி அவன் சொன்னானோ இல்லையோ, சின்னப் பக்கிரி பெட்டியைக் கீழே வைத்தான். தலை முண்டாசை அவிழ்த்து உதறிக் கட்டினான். முண்டாசை ஒரு புரட்டுப் புரட்டினான். மீசையை இரண்டு விரலாலே முறுக்கினான். "டேய், யாரைப் பாத்துடா சொல்லிப்பிட்டே, இந்த வார்த்தையைப் போனாப் போவுதுன்னு? சிங்கப்பூர் சின்னப் பக்கிரியைப் பாத்தா விளையாட வரே?..ஹஹ்ஹைஹங்!" என்று விறைத்துக்கொண்டு கிளம்பினான் சண்டைக்கு.

சீனன் வாயைத் திறக்கவில்லை. சட்டைப் பையில் கையை விட்டு இரண்டு, மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து, "இந்தா! இதை எடுத்துக்கிட்டுப் போங்க!" என்று காளியின் கையில் கொடுத்தான்.

"இனிமே இங்கே வராதீங்க!" என்றான் ஷங்கங்.

"இவன் யாருடா?" என்று மறுபடியும் உறுமினான் சின்னப் பக்கிரி.

பேச்சு தடிப்பதற்குள் சீனன் டிரைவரைப் பார்த்து, "சாபர்! வண்டியை விடு! உம்!" என்று மெல்ல உத்தரவு கொடுத்தான். உடனே வண்டி புறப்படும் சோடு தெரியாமல் புஸுக்கென்று புறப்பட்டது.

"சீனா! ஏய், சீனா!" என்று கத்தினான் சின்னப் பக்கிரி.

"சீனாவாவது ஜப்பானாவது; போய்யா" என்று ஷங்கங் பதிலுக்குக் கத்தினான்.

அவர்கள் இரண்டு பேரும் பின்னாலேயே ஓடி வருவது தெரிந்தது. ஆனால் வண்டி ஒயிலாகத் திரும்பி, சிட்டாக மறைந்துவிட்டது.

இவர்களை என்ன செய்வது என்று புரியாமல் சீனன் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தான்.

டார்ஜான் பிக்சர் பாலஸின் பால்கனியில் சீனனும் ஷங்கங்கும் போய் உட்கார்ந்தார்கள். எத்தனையோ தடவை அந்தப் பால்கனி எப்படி இருக்கும் என்று பார்க்க அவர்கள் ஆசைப்பட் டிருக்கிறார்கள். தரை டிக்கட்டிலிருந்து கழுத்து ஒடிய ஒடிய, அதை அண்ணாந்து பார்த்துப் பிரமித்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் படிக்கட்டில் காலை வைக்கக்கூட அவர்களை ஒருவரும் விட்டதில்லை. கிட்டே போனாலோ அங்கிருக்கும் காவல்காரன் கழுத்தைப் பிடித்து விரட்டிவிடுவான். அப்படிப்பட்ட இடத்தில் இன்று ஜம்மென்று ஏறி, ராஜதோரணையில் போய் உட்கார்ந்துகொண்டார்கள். ஆளுக்கு ஓர் ஐஸ் கிரீம் கப்பை வாங்கிக்கொண்டு சுவைத்தார்கள்.

சற்றைக்கெல்லாம் படம் ஆரம்பமாயிற்று. படம் கிட்டத்தட்ட அவனுடைய சொந்தக் கதையைப் போலவே இருந்தது. தெருவில் இருந்த சாதாரண பிச்சைக்காரப் பையனுக்குத் திடீரென்று அதிருஷ்டம் அடிக்கிறது. அவன் அந்த அதிருஷ்டத்தை எப்படி அநுபவித்துக் காப்பாற்றுவது என்று தெரியாமல் விழிக்கிறான். அந்த அதிருஷ்டம் வந்ததிலிருந்து அவனுக்கு முன்பு இருந்த சந்தோஷமும், சௌகரியமும்கூட இல்லாமல் போய், திரும்பத் திரும்ப சங்கடத்தில் மாட்டிக்கொள்கிறான். அதிருஷ்டம் வந்தால் போதுமா? அதை அநுபவிக்கத் திறமை வேண்டாமா? அந்தத் திறமை கல்வியறிவு இல்லாமல் ஏற்படுமா? கல்வி வாசனையும், திறமையும் இல்லாத அந்தப் பையன் தானாக வந்த அதிருஷ்டத்தை அநுபவிக்க முடியாமல் தத்தளித்தான். அவனுடைய தத்தளிப்பைக் கண்டு, படம் பார்க்கிறவர்கள் எல்லாரும் சிரித்து ரஸித்துக்கொண் டிருந்தார்கள். கடைசியில் முடிவுதான் சீனனுக்கு வயிற்றைக் கலக்கியது. எழுந்து வெளியிலே ஓடிவந்து விடலாமா என்று தோன்றியது. அந்தப் பையனுக்கு வந்த அதிருஷ்டத்தை ஓர் அக்கிரமக்கார ஆள் அபகரித்துக்கொண்டு, அவன் உயிருக்கே ஆபத்தை உண்டாக்கினான். பணம் போனாலும், உயிர் மிஞ்சினால் போதும் என்று அந்தப் பையன் தப்பி ஓடி வருகிறான். மறுபடியும் பழைய பிளாட்பாரத்தில், சாக்கடைக்கு அருகில் படுத்துத் தூங்க வேண்டிய நிலை வந்துவிடுகிறது.



பழைய நண்பர்களும் சுற்றத்தார்களும அவனை மேலும் துன்புறுத்திக் கேவலமாக நடத்துகிறார்கள். அவன் படும் துன்பத்தைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. கதை அப்புறம் எப்படி முடிந்ததோ, என்னவோ சீனன் எழுந்து வெளியில் வந்துவிட்டான். ஷங்கங் மட்டும் முடிவுவரையில் பார்த்துவிட்டுத்தான் வருவான் என்று தோன்றியதால், அவன் மாடி வராந்தாவருகில் போய் நின்றுகொண் டிருந்தான்.

படத்தில் தோன்றிய பையன் வெகு அருமையாக நடித்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவன் பல சந்தர்ப்பங்களில் சாமர்த்தியமாக நடந்துகொண் டிருந்திருக்கலாம் என்றே சீனனுக்குத் தோன்றியது. தெரியாத்தனத்தினால் அவன் எல்லாரையுமே அப்படியே நம்பிவிட்டான். உண்மையானவர்கள் யார், கபடமானவர்கள் யார் என்று அவன் யோசித்துப் பார்க்கவே யில்லை. அதனால்தான் அவனுக்குப் பல கஷ்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்டுக் கொண் டிருந்தன. ஆகவே இதிலிருந்து தானும் இனி ஜாக்கிரதையாக, எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று அவன் தீர்மானித்துக்கொண்டு நின்றான்.

சற்றுப் பொறுத்து அவன் தற்செயலாகத் திரும்பிப் பார்த்தபோது வெளிச்சத்திலிருந்து இருட்டை நோக்கி யாரோ அவசரமாக மறைந்து செல்வது தெரிந்தது. அதைக் கண்ட பிறகுதான் சீனனுக்கு இப்பொழுது உண்மையிலேயே பயம் தோன்றத் தொடங்கியது. அப்படி அவசரமாக மறைந்து சென்றவன், தன்னைத் தொடர்ந்து வந்திருப்பதாகவே தோன்றியது. அதில் சந்தேகமில்லை. படத்தில் பார்த்த கதையைப்போல, தனக்கும் ஏதாவது தொந்தரவு வராமல் போகாது என்று அவனுக்கு முதல் முதலாகப் பட்டது. உடல் எல்லாம் வெடவெடவென்று நடுங்கியது. நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது? தனியாக நிற்கவே யோசனையாக இருந்தது.

உள்ளே போகவும் மனம் பிடிக்காமல், வெளியில் நிற்கவும் தைரியம் இல்லாமல், அவன் சங்கடத்தோடு தடுமாறினான். வண்டியை

ஓட்டத் தெரிந்திருந்தால், ஷங்கங்கும் டிரைவரும் மெதுவாக வந்து சேரட்டும் என்று அவன் முன்னால் புறப்பட்டுப் போயிருப்பான். ஆனால் அந்த ஹோட்டல் அறைக்குத் தனியாகப் போக இப்போது அவனுக்கு இஷ்டமில்லை. சின்னப் பக்கிரிக்கும் காளிக்கும்கூட அவன் பயப்படவில்லை. அவன் தங்கியிருந்த அறைக்கு எதிர் அறையில் யாரோ இருந்தானே, அவனை நினைத்துப் பார்த்துக்கொண்டுதான் அவன் பயந்தான்.

இப்பொழுது பெரிய லட்சாதிபதியாக ஆகிவிட்ட பெருமையும் பூரிப்பும் மறைந்து, 'ஏண்டாப்பா இப்படி ஆனேனும்?' என்றுகூடக் கவலை ஏற்படத் தொடங்கி விட்டது.

''டிரிண் . டிரிண் . . டிரிண் . .''

படம் முடிவதற்கான மணிதான் அது. கதவுகளும் திரைகளும் விலகும் ஓசை 'சர் சர்' ரென்று தொடர்ந்து கேட்டது. கும்மென்ற புழுக்கமான காற்றும், சந்தடியும் வெளிவரத் தொடங்கின. ஜனங்கள் எல்லாரும் கடைசியில் சிரித்த முகத்தோடு வெளிவந்துகொண்டிருந்தார்கள். வேர்வை வடியும் அவர்கள் முகத்துக்கு அந்தச் சிரிப்புகூட விகாரமாகத்தான் இருந்தது. எல்லாம் அப்படிச் சந்தோஷப்படும்படி கதை எப்படி முடிந்திருக்கும், அந்தப் பையன் எப்படி ஆகியிருப்பான் என்பனவற்றைத் தெரிந்துகொள்ள சீனனுக்கு ஒரே ஆவலாக இருந்தது. ஷங்கங் சீனனைத் தேடிக்கொண்டு வெளியில் வந்தான். ''ஏண்டா, பாதியிலே எளுந்திரிச்சு வந்துட்டே?'' என்று கேட்டுக்கொண்டே ஷங்கங் அவன் தோளைப் பற்றிக்கொண்டான்.

''அப்புறம் என்ன ஆச்சு? அந்தப் பையன் என்னவானான்?'' என்றான் சீனன்.

ஷங்கங் ஏதோ பதில் சொல்ல வந்தான். அதற்குள் கூட்டத்தினுள்ளே ஒருவன் வெகு நெளிவாக நுழைவதைப் பார்த்துவிட்டு, ''டேய், டேய்! அதோ பார்!'' என்று அந்த ஆளைச் சீனனுக்குக் காட்டினான்.






''அதோ, அந்தச் சேப்புச் சட்டைப் போட்டுக்கொண்டு அந்தத் தாடிக்காரனுக்குப் பின்ஞலே போகிருனே, அவன்தான்; ஆளைப் பாத்தியா?'' என்ருன்.

சீனன் அவன் காட்டிய ஆளைப் பார்க்க முயன்ருன். முகம் மட்டும் தெரியவில்லை. அவனுக்கு முன்ஞல் வேகமாக நடந்து, அந்த முகத்தைப் பார்த்து விடவேண்டும் என்று இருவரும் வேகமாக நடந்தார்கள். அந்த ஆள் இவர்களைக் கவனித்து விட்டானே, என்னவோ; முகத்தைத் திருப்பாமலேயே அந்தக் கூட்டத்துக்குள் வெகு சாமர்த்தியத்தோடு மறைந்து மறைந்து முன்னேறிக்கொண்டிருந்தான். இவர்களும் விடாமல் அவன் வேகத்துக்கு மேலான வேகத்துடனேயே பின்பற்றிச் சென்ருர்கள்.

இந்தப் போட்டி சிறிது நேரம் நடந்தது. கூட்டம், சாலைக்கு வந்ததும் கலகலத்து விட்டது. அதற்குமேல் அந்த ஆளிஞல் எங்கும் தன் முகத்தை மறைத்துக் கொள்ள முடியவில்லை. பின்ஞல் தன்னை யாரும் தொடர்ந்து வரவில்லை என்பதை நிச்சயப் படுத்திக் கொள்வதற்காகச் சிறிது நின்று திரும்பிப் பார்த்தான். அவன் திரும்பிய சமயமும் இவர்கள் இருவரும் அவனைப் பார்த்த நேரமும் கணக்காக இருந்தன. அவனை இவர்களும், இவர்களை அவனும் மிக மிக நன்ருகக் கவனித்துவிட்டார்கள்.

சீனனுக்கு உடனே 'சொரக்' கென்றது. அந்த ஆளை அவன் அதற்குமுன் எங்கேயோ பார்த்திருக்கிருன். அந்த முகத்தை அவன் வெகு அருகில் இருந்து கவனித்திருக்கிருன். அந்த ஒரு நாளில் அவர்கள் பல இடங்களுக்குப் போஞர்கள். பல பேரைப் பார்த்தார்கள். அதஞல் இவனைச் சட்டென்று இன்ன இடத்தில்தான் பார்த்தோம், பேசினேம் என்று பிடிபடவில்லை.

''இருடா, இவஞ? இவனை நாம்ப எங்கேயோ . . ஆங் . . ஞாபகம் வந்துவிட்டது, காலையில் ஹைக்கோர்ட்டில், பாரிஸ்டர் வேதாசலத்தோடு வந்தானே அவர்கூடச் சொல்லவில்லையா? 'அவன் உன்னைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கும் வரையில் நல்லது' என்று சொல்லிவிட்டுப் போஞரே!'' என்ருன் சீனன்.

ஆஞல் ஷங்கங் அதெல்லாம் தனக்குத் தெரியாது என்று தலையை ஆட்டியவாறு அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த ஆள் அதற்குப் பிறகு வேறு யாரையோ தேடுவது போல் பாசாங்கு செய்துவிட்டு, அவனுக்கே உரிய வேகத்தோடு திரும்பிச் சாலையைக் குறுக்கே கடந்து சென்ருன்.

''காலையில் பார்த்தவன் தானே?'' என்று மறுபடியும் கேட்டான் சீனன்.

''எனக்கு எப்படித் தெரியும்? நான் அப்புறம்தானே வந்தேன்? ஆஞல் நான் இவனைப் பார்த்திருக்கிறேன். இரு; யோசிச்சு எங்கே என்று சொல்கிறேன் . . ஆங் . . எங்கே தெரியுமா? நம்ப ஹோட்டல்லேதான்? ஆமாம்; நிச்சயமா நம்ப ஹோட்டல்லேதான். உன்

அறைக்கு எதிர்த்த அறையிலே நம்பளைக் கண்டதும், கதவைச் சாத்திக் கொண்டானே, இவன் தான்!'' என்று உறுதியாகக் கூறினான் ஷங்கங்.

அவனுடைய சப்பை மூக்கும், சின்னக் கண்களும் சீனனுக்கு மறக்கவேயில்லை. பாரிஸ்டர் வேதாசல முதலியார் சொன்ன மற்றொரு விஷயமும் மறக்க வில்லை அவனுக்கு. அவன் அந்தக் கிழவருடைய தம்பி மகன் என்று சொல்லி, அவன் பெயரைக்கூட கிங் கிங் என்றோ, குங் சிங் என்றோ சொன்னார். அவன் எதற்குத் தன்னை இப்படி எங்கே போனாலும் பின்தொடர்ந்து வருகிறான் என்று சீனனுக்கு அச்சமாக இருந்தது. ஆயினும் வாயை விட்டுச் சொல்லாமல், ஷங்கங்கை அழைத்துக்கொண்டு, கார் நிற்குமிடத்துக்கு வந்தான்.

படக்கதையை மேலே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது மறந்து போய்விட்டது. அந்தப் படத்தில் நடித்த பையனுடைய கஷ்டங்கள் மட்டும் நினைவில் தங்கியிருந்தன. தன்னுடைய அதிருஷ்டமே தன் உயிருக்கு உலையாக இருக்கும்போல அவனுக்கு ஒரு கிலி ஏற்பட்டு விட்டது. பேச்சே ஓடவில்லை.

கிழவருடைய இந்தத் தம்பி மகன் மிகவும் பொல்லாதவனாக இருப்பான் என்றுதான் அவனுக்கு வர வர அதிகமாகப் படத் தொடங்கியது. அவன் காலையில் அணிந்துகொண் டிருந்த நேவி பனியனை இப்போது காணோம். இருந்தாலும் அந்தக் காட்சி அவனுக்கு வேறு ஒரு நினைவை உண்டாக்கிவிட்டது.

முதல் முதலில் அந்தக் கிழவரைச் சந்திக்க நேர்ந்தது துறை முகத்தில்தானே? கிழவருக்குக் கடற்கரையில் என்ன வேலை? அப்படியே வேலை ஏதோ இருந்தாலும் அவரை அடித்துப் போட்டவன் யார்? அவரைக் குற்றுயிரும் கொலை உயிருமாகப் போட்டுவிட்டு அவன் படகில் ஏறி மறைவானேன்? சொத்துக்கள் எல்லாவற்றையும் தனக்கே எழுதி வைக்கும்படி என்ன நடந்திருக்கும்? இந்தத் தம்பி மகன் கப்பலில் மாலுமியாக இருப்பானோ?

யோசிக்க யோசிக்க, இதெல்லாவற்றிற்கும் ஏதோ ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதுபோல அவனுக்குப் பட்டது. அப்படிப் பட்ட பிறகு, பாரிஸ்டர் வேதாசலம் சொன்ன வார்த்தைகளில் ஏதோ விசேஷப் பொருள் இருப்பதும் புரிந்தது. இதற்கு ஏற்றாற் போல அவன் ஹோட்டலிலும் சினிமாவிலும் தன்னையே தொடர்ந்து வருவது அந்தச் சந்தேகத்தை இன்னும் பலமாக ஊர்ஜிதம் செய்தது.

''சாபர்!''

''மாஸ்டர்!''

''பாரிஸ்டர் பங்களா தெரியுமில்லே, உனக்கு?''

''தெரியும்; ஒயிட்ஸ் ரோட்டிலே இருக்கு.''

''முதல்லே நேரே அங்கே போ! அப்புறம் ஹோட்டலுக்குப் போய்க் கொள்ளலாம்!'' என்று உத்தரவு கொடுத்தான் சீனன்.

கார் பாரிஸ்டர் வேதாசலத்தின் பங்களாவுக்குள் நுழைந்து, கம்பீரமாகஓர் உலுக்கு உலுக்கிவிட்டு நின்றது.

ஆனால் என்ன ஆச்சரியம்! சீனனும் ஷங்கங்கும் படியேறும் போது, படியிலிருந்து வேகமாக ஓர் ஆள் இறங்கி, அவர்களைத் தாண்டிச் சென்றது தெரிந்தது. சீனன் திரும்பிப் பார்த்தான். அதே ஆள்தான்; கிழவருடைய தம்பி மகன்; கிழவருடைய ஆஸ்திகளில் ஒரு பைசாகூட அடையாத அந்தச் சப்பை மூக்கு ஆள், முகத்தைத் திருப்பாமல், கனவேகமாக அவர்களைக் கடந்து வெளியே சென்றுகொண் டிருந்தான்.

''இங்கேயும் அவன் வந்திருக்கான்டா!'' என்றான் ஷங்கங்.

''இருக்கட்டும்: பாரிஸ்டர் இருக்காரா, பார், முதல்லே!'' என்றான் சீனன்.

அவர் மேலே அவர்களை அழைத்து வரச் சொன்னதை அறிந்து இருவரும் மெத்தைப் படிக்கட்டுகளில் ஏறிச் சென்றார்கள்.

(தொடரும்)

# புதுப் புத்தகம்

**எஸ். ரங்கநாயகி**

பாத்திரங்கள்:

விச்சு, பாச்சு, கிச்சு-சகோதரர்கள்.

அப்பா - அவர்கள் தந்தை.

## 1

விச்சு: டேய் பாச்சு, கிச்சு, எவ்வளவு நேரம்டா தூங்குவீர்கள்? எழுந்திருங்கோடா. இன்னிக்கி ஸ்கூல் திறப்பு விழாவாச்சே, மறந்துட்டேளா?

பாச்சு: அடப் போடா, ஸ்கூல் திறப்பு விழாவாம் திறப்பு விழா! பேசத் தெரியாமெ பேசுவான் இவன்.

கிச்சு: உனக்கென்னடா எழுந்திருக்கும்போதே இவ்வளவு கோபம்? கனவுலே முதல் நாளே வாத்தியாரிடம் அடி வாங்கறுப்பலே கண்டுவிட்டியோ?

பாச்சு: சரிதாண்டா, நீ உன் கேள்விகளை அடுக்க ஆரம்பித்து விடாதே. என்னவோ பெரிய வைபவம் மாதிரி லீவுக்குப் பிறகு ஸ்கூல் திறக்கப்போவதை 'விழா'ன்னு சொல்லி, தான் ஹாஸ்யமாகப் பேசிவிட்டதாக நினைச்சுண்டு, திருப்பள்ளியெழுச்சிப் பாடி, நம்மை எழுப்ப வந்துட்டானே அந்த விச்சு, அவன் ஒரு முட்டாள். அதை ரசித்து நீ எழுந்திருக்கிறாயே, நீ ஒரு முட்டாளிலும் முட்டாள்.

விச்சு; பேச்சை ரசிக்கத் தெரியாவிட்டாலும், மற்றவர்களை முட்டாள் என்று திட்டும் நீயோ முட்டாளிலும் முட்டாளிலும் பெரும் முட்டாள்.

பாச்சு: பேஷ், பேஷ்! நன்றாகச் சொன்னான்!

கிச்சு: அச்சச்சோ, இந்தப் பாச்சுக்குப் பைத்தியம்தான் பிடித்து விட்டது. தன்னை முட்டாள் என்று ஒருவன் திட்டுவதைக் கேட்டுவிட்டு, 'பேஷ், நன்றாகச் சொன்



ஹுன்' என்கிருனே! அதுவும் 'உம்' என்ருல் கச்சை கட்டிக்கொண்டு சண்டைக்கு வந்துவிடும் இவன் இப்படிச் சொல்வதென்ருல் இவனுக்கு நிச்சயம் பைத்தியம்தான் பிடித்திருக்கவேண்டும்.

பாச்சு: டேய் கிச்சு, உன் மூளையிலே மண்டை இல்லேன்னு....

விச்சு: டேய் டேய்....உன் மண்டையிலே மூளேன்னு திருத்திக் கொண்டு, சரியாகவாவது திட்டத் தெரிஞ்சுக்கோ.

பாச்சு: உன்னுடைய கரெக்ஷனுக்குத் தாங்க்ஸ்..டேய், கிச்சு, இப்பவாவது சந்தேகமில்லாமெ தெரிஞ்சுக்கோ. நான் ஒரு முட்டாள், என் அண்ணன் ஒரு பெரிய முட்டாள், என் தம்பி மிகப் பெரிய முட்டாள்.

கிச்சு: டேய் பாச்சு, இனிமே பேசிண்டே போனு, எனக்குக் கெட்ட கோபம் வரும். எழுந்திருக்கும்போதே முட்டாள் என்று திட்ட நீ யாரடா....?

பாச்சு: நான் யாரா? சாக்ஷாத் உன்னுடை அண்ணன் பாச்சு. உங்களே முட்டாள்னு சொன்னுல் மட்டும் கோபம் வருகிறதே, முட்டாள் இல்லே என்று காட்டத் தெரிகிறதா?

விச்சு: விஷயத்தைச் சொல்லாமெ பேசிண்டே போறதுலே ரொப்பக் கெட்டிக்காரண்டா நீ. முட்டாள்தனமான வேலே என்னடா இப்போ செய்துவிட்டோம்?

பாச்சு: 'திறப்பு விழா'ன்னு பெரிசா சொன்னியே, நமக்கு அது ஒரு விழாவா? எல்லோரையும் போல், ஸ்கூல் திறந்தவுடனே புதிதாகப் புத்தகம் வாங்கி, நலுங்காமல் பக்கங்களேத் திருப்பித் திருப்பிப் பார்க்கும் ஆனந்தமாவது நமக்கு உண்டா? பாஸான தற்கு வெகுமதியாக ஒரு புதுப் புத்தகமாவது நமக்கு உண்டாடா?

கிச்சு: ஆமாண்டா, புதுப் புத்தகம் வாங்கும் பாக்கியம் நம்ம தலேயிலே எழுதியிருக்கவில்லேயடா. வழக்கப்படி மாமா பிள்ளே ரங்குவின் புத்தகம் விச்சுவுக்கு! விச்சுவின் புத்தகம் உனக்கு! எல்லாரும் படித்த பிறகு உன்னிடம் வந்துள்ள புத்தகங்கள் கடைசியாக உயிர் தேஞ்சு என்னிடம் அடைக்கலம் அடைகிறது.

விச்சு: நம்ப மூன்று பேரும் அடுத்த அடுத்த வகுப்பில் படிக்கும் விபரீதம்டா இது!

பாச்சு: ஆமாம்டா, நீ இந்த ஒரு வருஷமாவது பைலாகி இருக்கக் கூடாதா? உன் புத்தகம் உன் கையிலேயே இருக்கும், எனக்குப் புதுப் புத்தகம் வாங்கித் தருவாரே அப்பா.

விச்சு: அயோக்கியத்தனமாகப் பேசாதே. உனக்குப் புதுப் புத்தகத்திற்காக நான் பைலாக வேண்டுமா? நீதான் இந்த வருஷம் பைலாகி விடேன். கிச்சுவிற்குப் புதிதாகக் கிடைக்கட்டும்.

கிச்சு: அட ஏண்டா, இதுபோல அபசகுனமா பேசுகிறீர்கள்? இந்தப் பாழாய்ப்போன ஸ்கூலேச் சொல்லு. நான்கு வருஷத்திற்கு ஒரு தடவை புத்தகம் மாற்றுகிருர்கள். அது மாமா பிள்ளே ரங்குவிலிருந்து நான் படிக்கும்வரை சரியாக முடிகிறது. எல்லாம் நம் தலே விதி!

பாச்சு: தலேவிதி தலேவிதின்னு சொல்லி நம்ம தலேயிலே நாமே மண்ணே அள்ளிப் போட்டுக் கொள்கிருேம். இந்த வருஷம் எப்படியாவது மூன்று பேரும் புதுப் புத்தகங்கள் வாங்கிவிட வேண்டும். அதற்கு ஏதாவது ஒரு வழி செய்யணும்.

கிச்சு: ஆமாண்டா, நீ யோசனே சொல்லு. நாங்கள் ஒத்து வருகிருேம்.

பாச்சு: அப்பாகிட்டே போய் எல்லாப் புத்தகங்களும் மாறிப் போயிடுத்துன்னு சொல்லிடலாண்டா!

விச்சு: ரொம்பச் சுலபமாகச் சொல்லிட்டே. அப்பா நம்ப வேண்டாமா? புத்தக லிஸ்டைப் பார்க்கமாட்டாரா?

பாச்சு: பார்த்துக் கொள்ளட்டுமே. நம்மிடம் அப்பா சும்மா, 'படிடா, எழுதுங்கடா' என்று சொல்வாரே தவிர, நாம் என்ன புத்தகம் படிக்கிருேம் என்று அப்பா தெரிந்துகொள்ள முயற்சித்ததே இல்லே. நாம் பாஸானுல் போதும் அப்பாவுக்கு. அதனுல்

லிஸ்டைப் பார்த்து அப்பா தெரிந்துகொள்ள மாட்டார்.

கிச்சு: ரொம்ப ரைட், அப்படித் தான் செய்யணும்.

## 2

கிச்சு: அப்பா....வந்து....

அப்பா: 'என்னடா வந்து' அப்பாவுக்கு?

பாச்சு: ஸ்கூல் திறந்துவிட்டார்களே?

அப்பா: திறக்கட்டுமே, அதற்கு நான் என்ன செய்யணும்? அம்மாவைப் பணம் கேட்டு முதல் மாதச் சம்பளத்தைப் பாங்கியில் போடுவதுபோல் ஸ்கூலுக்குப் பீஸாகக் கட்டிவிடுங்கள். நான் என். ஜி. ஓ. அதனுல் இரண்டு மாதம் கழித்து அந்தப் பணம் அப்படியே திரும்பி வந்துவிடும். அம்மாவிடம் திருப்பிக் கொடுத்துவிடலாம்.

விச்சு: அதைப்பற்றிச் சொல்லவில்லை, அப்பா..வந்து..புத்தகங்கள் வேண்டுமே!

அப்பா: அதற்கு என்னை ஏன் கேட்கணும். ரங்குவைப் போய்க் கேள். அவன் புத்தகம் உனக்கு, உன் புத்தகம் பாச்சுவுக்கு, பாச்சு புத்தகம் கிச்சுவுக்கு. வழக்கம் போல் எடுத்துக் கொள்ளுங்களேண்டா. அடுத்தடுத்து நீங்க ஒரே வகுப்பு வித்தியாசத்திலே படிப்பதால் இது ஒரு பெரிய சாதகம்டா, பயலே எனக்கு!

கிச்சு: அதுக்கில்லை அப்பா... இந்த வருஷம்...வந்து...அப்பா. இந்த வருஷம்..புத்தகமெல்லாம். வந்து...

பாச்சு: அட ஏண்டா, சொல்றதுக்குப் பயந்து சாகிருய்? 'வந்து' போடாமெ விஷயத்தைச் சொல்லேண்டா.

விச்சு: பாவம், அப்பாவுக்குச் செலவாகிறதே என்று மனம் வருந்திச் சொல்கிருண்டா. அவனைப் போய்த் திட்டுகிருயே. நீதான் விஷயத்தைச் சொல்லேன்.

பாச்சு: நீதான் சொல்வேன்.

விச்சு: ஐயையோ, நான் மாட்டேன். டேய் கிச்சு, நீயே சொல்லு.

கிச்சு: அச்சச்சோ, நீங்களே நான் ஆரம்பித்ததை முடிச்சிடுங்கோடா.

பாச்சு: நல்ல பிள்ளைகள்தான் நீங்கள்! நானே சொல்கிறேன். அப்பா, புத்தகமெல்லாம் மாறிப் போச்சு.

அப்பா: என்னது! புத்தகம் மாறிப்போச்சா? எந்த வகுப்பிற்கு மாறிப் போயிடுத்துடா?

விச்சு: என் கிளாஸுக்கு மாறிப் போச்சு.

பாச்சு: எனக்குக்கூட...

கிச்சு: எனக்குக்கூட...

அப்பா: ஏண்டா பசங்களா, உங்க வாத்தியாரெல்லாம் தங்களை பெரிய சட்டம் போடற துரைன்னு நினைத்துக்கொண்டு விட்டார்களா? வருஷா வருஷம் புதுப் புத்தகம் வாங்க எங்களிடம் பணம் கொட்டிக் கிடக்குன்னு அவர்களோட எண்ணமா? எங்கள் பணம் கரைவதில் அவர்களுக்கு என்னடா அவ்வளவு சந்தோஷம்?

பாச்சு: அப்பா ..வந்து..வந்து. வாத்தியார் மேலே தப்பில்லையாம். ஹெட்மாஸ்டர் மேல்தான் தப்பாம். பழைய புத்தகங்களையே மறுபடி வகுப்பிற்கு வைத்திருந்தால் வாத்தியார்களெல்லோரும் பழைய வினுத்தாளையே பரீக்ஷைக்குக் கொடுத்து விடுகிருர்களாம். அதனுல் மாணுக்கர்களும் பழைய வினுக்களை மட்டும் படித்துக் கொண்டு மற்ற பாடங்களைப் படிக்காமல் சோம்பேறிகளாகி விடுகிருர்களாம். பையன்கள் சோம்பேறித்தனத்தைப் போக்க வேண்டும் என்று ஹெட்மாஸ்டர் சங்கத்தில் ரகசியமாகப் புதுப் புத்தகங்கள் மாற்ற வேண்டித் தீர்மானம் நிறைவேற்றும். அந்த ரகசியத்தை வேணுப் பிள்ளை ரகசியமாக ராஜுவிடம் சொல்ல, ராஜு ரகசியமாக ராமுவிடம் சொல்ல, ராமு என்னிடம் ரகசியமாகச் சொல்லிவிட்டான்.

அப்பா: அப்படியா சமாசாரம்!..சரி, புஸ்தக லிஸ்டைக் கொடுங்கள், பார்க்கலாம். (விச்சு எல்லோருடைய லிஸ்டையும் கொடுக்கிருன்) அச்சோ, இவ்வளவு புத்தகங்களா வாங்கணும்?

பாச்சு: அப்பா, தமிழ், இங்கிலீஷ், கணக்கு, சம்ஸ்கிருதம் இவை மட்டும் இப்போ வாங்கி



குடியிருப்பவர்: என்ன தம்பி, உங்க வீட்டில் கொசுவும் தவளையும் சேர்ந்து செய்கிற பாட்டுக் கச்சேரியில் தூக்கமே வரதில்லே! இப்படி இருக்கும்னு தெரிஞ்சிருந்தால் நான் குடிவந்திருக்கவே மாட்டேன்.

வீட்டுக்காரப்பையன்: பின்னே நீங்க கொடுக்கிற 20 ரூபாய் வாடகைக்குப் பெரிய வித்வான் வந்து கச்சேரி பண்ணுவார்னு எண்ணினீரோ?

—ஜோதிர்லதா கிரிஜா.

---

விடுங்கள். மற்ற புத்தங்கள் அடுத்த மாதம் பார்த்துக்கொள்ளலாம்.

அப்பா: சரி சரி, அம்மாவிடம் பேப்பர் விற்ற காசு, புட்டி விற்ற காசு எல்லாம் இருக்கும். வாங்கி வாருங்கள். புத்தகம் வாங்கி வருகிறேன்.

# 3

பாச்சு: அப்பாவிடம் பொய் சொல்லி விட்டோமே என்று எனக்கு மனசு அடிச்சுண்டதுடா. அதனால்தான் நான்கு புத்தகம் மட்டும் வாங்கி வரச் சொன்னேன். மற்றவைகளைப் பழைய புத்தகங்களையே, எடுத்துக்கலாம்டா.

விச்சு: ஆமாண்டா.. அதோ அப்பா வருகிறாரே. ரிக்ஷாவில் பெரிய மூட்டையுடன் வருகிறாரே; எல்லாப் புத்தகங்களும் வாங்கி விட்டார் போலிருக்கு. பாவம்டா, அப்பா நல்லவர்.

(பெரிய புத்தகக் கட்டுடன் அப்பா உள்ளே வருகிறார்.)

கிச்சு: அப்பா, இதென்ன பெரிய மூட்டை? எல்லாப் புத்தகங்களும் வாங்கிட்டேளா?

அப்பா: ஆமாம், மலிவாகக் கிடைக்கும்போது விடுவார்களா? புத்தகக் கடைக்குப் போய்க்கொண்டிருந்தபோது சோணாசலத்தைப் பார்த்தேன். அவன், "டேய், இங்கே வாங்க வேண்டாம். மூர் மார்க்கட்டிலே எனக்குத் தெரிந்த பழைய புத்தகக் கடைக்காரன் இருக்கிறான். அவனிடம் எல்லாப் புத்தகங்களும் இருக்கும். எப்படியோ எங்கிருந்தோ அவன் பழைய புத்தகங்களைச் சேர்த்து விடுவான். இந்த லிஸ்டிலே இருக்கும் புத்தகங்கள் எல்லாம் ஹைதர் காலத்திலே யாராவது படிச்ச புத்தகமாகத்தானே இருக்கும். அதனாலே நயமான விலைக்கு அவன் கடையிலே வாங்கலாம். அவன் கடையிலே இல்லேன்னா இங்கே வாங்கலாம்" என்றான். அவனையும் இழுத்துக்கொண்டு மூர்மார்க்கெட்டுக்குப் போனேன். நம்ம அதிருஷ்டம், எல்லாப் புத்தகங்களும் அவன் கடையிலே இருந்தன. கடைசியில் பேரம் செய்து, புத்தக விலையிலே மூன்றில் ஒரு பங்கு கொடுத்து வாங்கி வந்தேன். நயமாகக் கிடைக்கும்போது விடுவார்களா என்று எல்லாப் புத்தகங்களும் வாங்கிவிட்டேன். டேய், பசங்களா, புத்தகங்களிலே கிளைவுக்கு நாமம், விக்டோரியா ராணிக்கு மீசை எல்லாம் தாராளமாக இருக்கு. அதனால் நீங்க வேறு கை வரிசை காட்டாமெ ஜாக்கிரதையாக வெச்சுக்கோங்க. கிழிந்த பக்கங்களை ஒட்டி வெச்சுக்கோங்க. புரிந்ததா?

பாச்சு: ஆஹா, பேஷாகப் புரிந்தது, பழைய புத்தகத்திற்காகத் தலையில் பிரம்மன் எழுதிய எழுத்தை மாற்ற முடியாது என்று நன்றாகப் புரிந்தது!

# குப்பையில் கிடந்தது

**கி. சாரங்கராஜன்**

“நேற்று இரவு வீட்டில்தான் இருந்தீரோ”?

“ஆமாம். இங்கேதானே இருந்தேன். இதோ இந்த நாவலைத்தான் படித்துக்கொண்டிருந்தேன்”

“ஓஹோ. ரொம்ப நேரம் படித்துக் கொண்டிருந்தீர்களோ!”

“இருக்கும். பத்தரை மணி வரையில் படித்துக் கொண்டிருந்திருப்பேன்.”

“இன்று விடிந்ததிலிருந்து வீட்டில்தான் இருக்கிறீர்கள் அல்லவா?

“இல்லை. எப்பொழுதும் மாதிரி, காலை உலாவப் போய்விட்டு வந்தேன். ஏழு மணிக்குத் திரும்பி விட்டேன், அப்புறம் வீட்டை விட்டு நகரவில்லை.”

“உண்மையைச் சொல்லும், பிள்ளைவாள். நீர் நேற்று ஏலத்தில் எட்டு மணிக்கு இருந்தாகத் தெரிகிறது. விளக்கு அணைந்ததும் நீர் அங்கிருந்து நழுவி யிருக்கிறீர். மறுபடி விளக்கு வந்ததும் உம்மை அங்கே காணவில்லை. இதுவே போதும் தெரியுமா, உங்கள்மீது திருட்டுக் குற்றம் சாட்டுவதற்கு?” என்றார் சுதாகர். அவர் குரலில் கடுமை தொனித்தது.

“மன்னிச்சுடுங்க சார். நான் ஏலத்துக்கு வந்திருந்தேன். விளக்கு அணைந்ததும் பயந்து போய் என்ன நடக்குமோவென்று வீட்டுக்கு வந்துட்டேன்” என்றார் ராமலிங்கம் பிள்ளை.

“உண்மையை ஒப்புக்கொள்ளும், பிள்ளைவாள். ஸ்டாம்பு உம்மிடம்தான் இருக்கிறது. நீர் அதை மறுக்க முடியாது. மரியாதையாக அதை எங்களிடம் கொடுத்து விடும். இல்லா விட்டால் போலீஸார் இங்கே சோதனை செய்து, விஷயம் பேப்பர்களிலெல்லாம் வெளியாகி....,”

“வேண்டாம் சார். போலீசை மாத்திரம் கூப்பிடாதீர்கள். ஆனால் ஒன்று கடவுளறியக் கூறுகிறேன்: ஸ்டாம்பை நான் எடுக்கவேயில்லை” என்றார். அவருக்கு மூச்சு வாங்கியது. இப்படியே இன்னும் கொஞ்ச நேரம் போனால் மனிதர் மூச்சுத் திணறிக் கீழே விழுந்துவிடுவார் போலத் தோன்றியது.

“எல்லாம் யோசித்துப் பாரும் நான் சொல்வதை. மறுபடியும் பிறகு வருகிறோம்” என்று கிளம்பினார் சுதாகர். கூட இருந்த ரவீந்திரரும் அவரைப் பின் தொடர்ந்தார்.

**வீ**ரப்ப செட்டியார் இறந்து விட்டதால் அவர் சேகரித்து வைத்திருந்த ஸ்டாம்புகள் சிலவற்றை அவர் பையன் கந்தசாமி ஏலத்தில் விடுவதாக இருந்தார். அவர் ரொம்ப விலையுயர்ந்த ஸ்டாம்புகளையெல்லாம் வைத்திருந்தார். ஆதலால் ஏலத்துக்கு வெகுதூரத்திலிருந்தெல்லாம் பலர் வந்திருந்தார்கள்.

அமெரிக்காவுக்குச் சென்று, ரகசியப் போலீஸ் இலாகாவுக்கு என தனியாகப் பயிற்சி பெற்றவர்கள் இளம் துப்பறியும் சிங்கங்களாகிய ரவீந்திரரும் சுதாகரும். இரண்டு பேரும் ஏலம் நடக்கவிருந்த இடத்துக்குக் கிளம்பினார்கள்.

சிறிது தூரம் சென்றதும் சுதாகர், “ஸார், அங்கே பாருங்கள், யாரோ ஒருவர் பதுங்கிப் பதுங்கி ஓடுகிறார். எனக்கு ஏதோ சந்தேகமாயிருக்கு” என்றார். பிறகு அந்த உருவத்தைப் பின்தொடர்ந்தார் அவர். ரவீந்திரர் மட்டும் ஏலத்துக்குச் சென்றார்.

ஏலம் எட்டு மணிக்கு ஆரம்பிக்கப் பட்டது. கால் மணியில் சில ஸ்டாம்புகள் விற்பனையாகி இருந்தன. ஸ்டாம்புகள் எல்லாம் பார்ப்பதற்காகச் சிறிய கண்ணாடிக் கேஸில் வைக்கப்பட்டிருந்தன;

திடீரென்று மின்சார விளக்குகளெல்லாம் அணைந்துவிட்டன.

"எல்லாரும் அப்படியே நில்லுங்கள்" என்று கந்தசாமி கத்தினர். எலக்டிரீஷியனை அழைத்து வந்து பார்க்கும் பொழுது மெயின் ஸ்விட்சுக்கு அருகில் 'வயர்' கத்தரிக்கப்பட் டிருந்தது. இதற்கிடையில் போலீசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. இன்ஸ்பெக்டரும் வந்து சேர்ந்தார். விளக்குள் மீண்டும் எரியத் தொடங்கின.

கந்தசாமி வெளிச்சம் வந்ததும் ஸ்டாம்புகள் வைக்கப்பட் டிருந்த கண்ணாடிக் கேஸுகளையெல்லாம் சரி பார்த்தார். அவற்றுள் ஒன்று மட்டும் காலியாக இருந்தது! அதற்குள் இருந்த ஐயாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள ஸ்டாம்பு ஒன்று காணமல் போயிருந்தது.

உடனே, அங்கிருந்த இன்பெக்டர் எல்லாரையும் சோதனை போட்டார். அப்பொழுதுதான் ரவீந்திரர் அங்கே வந்து சேர்ந்தார். இன்ஸ்பெக்டர் அவருக்கு எல்லாவற்றையும் தனிமையில் விளக்கினர்,

சோதனை முடிந்து கடைசியாக இரண்டு டில்லிக்காரர்கள் இருந்தனர். இன்ஸ்பெக்டர் அவர்களையும் விசாரித்தார்; அவர்கள் சகோதரர்கள். டில்லியில் பெரிய பணக்காரர்கள்; சென்னையில் 'பிரதாப் பவனத்'தில் தங்கி இருக்கிறர்கள் என்ற விவரங்கள் தெரிந்தன.

ரவீந்திரர் அவர்களிருவரையும் பார்த்தார். இருவரும் விலையுயர்ந்த மோதிரங்களை அணிந்திருந்தனர். ஒருவர் கையில் வாட்சு ஒன்றை அணிந்து கொண்டிருந்தார். அது சமீபத்தில் வந்துள்ள அலாரம் அமைப்பு பொருந்திய புதிய மாடல் கைக்கடியாரம்! அவர்களுடைய ஆடைகள் சென்டில் தோய்த்தெடுத்தது போல மணத்தது! கடைசியில் சோதனைக்குப்பின் விலாசத்தை மட்டும் பெற்றுக் கொண்டு அவர்களை விட்டு விட்டார் இன்ஸ்பெக்டர்.

இவ்வளவு அமர்க்களமும் முப்பது நிமிஷத்தில் நடந்துவிட்டது. கடைசியில்தான் சுதாகர் ஆடி அசைந்துகொண்டு அங்கே வந்தார்.

ரவீந்திரர் எல்லாவற்றையும் சுதாகருக்கு விளக்கிவிட்டு, "டில்லி சகோதரர்கள் மேலேதான் எனக்குச் சந்தேகம்" என்ருர். பிறகு வழியில் கண்ட உருவத்தைப் பற்றி கேட்டார்.

காலையில் தீர்மானமாகக் கூறுவதாகச் சொன்னர் சுதாகர்.

அடுத்த நாள் காலையில் இருவரும் ராமலிங்கம் பிள்ளை வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தனர். பிள்ளை ஓர் ஒண்டிக் கட்டை. சுற்றுப் பக்கத்தில் அவரை ஒரு விசித்திரமான மனிதராகக் கருதி வந்தனர்; அக்கம் பக்கத்தில் அவருக்கு நண்பர்கள் என்று ஒருவரும் கிடையாது. அங்கே நடந்த விவரம் தான் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

* * *

இருவரும் வெளியே வந்தனர். அங்கே ஒரு துப்பும் கிடைக்கவில்லை.

"ராமலிங்கம் பிள்ளை ஒரேயடியாகப் பயந்து விட்டாரே! இன்னும் கொஞ்சநேரம் அவரைக் கேள்வி கேட்டிருந்தால், மனுஷ



னுக்கு நாம் சிகிச்சை செய்ய வேண்டி வந்திருக்கும்'' என்ருர் ரவீந்திரர்.

''அதற்கு நாம் என்ன சார் பண்ண முடியும்? அங்கே டில்லி வாலா கிட்டே ஒண்ணுமில்லேன்னு, பிள்ளே வீட்டைச் சோதனை போடச்சொல்ல வேண்டியதுதான். அவர் திருடலேன்னு போலீசுக்கு எதுக்கு இவ்வளவு பயப்படணும்?'' என்ருர் சுதாகர்.

''அதெல்லாம் பின்னுலே தெரியும். ஆனுல் ஒண்ணு மட்டும் நிச்சயம். திருடினவன் ஒற்றையாகத் திருடவில்லே. ஒருவன் 'வயரை' அறுத்ததும் மற்றவன் திருட்டை நடத்தி யிருக்கிருன்'' என்ருர் ரவீந்திரர்.

இருவரும் உணவு அருந்திவிட்டு, டில்லிக்காரர்கள் இருக்கும் 'பிரதாப் பவன'த்துக்கு மத்தியான்னம் ஒரு மணிக்குச் சென்றனர். முதல் மாடியில் இருந்தது அவர்கள் அறை. அங்கே அவர்களே இன்முகத்தோடு வரவேற்றனர் டில்லிப் பிரமுகர்கள்.

''நான்தான் பிரேம்சந்த்! இவன் எனது தம்பி பகவான்'' என்று தங்களே அறிமுகப்படுத்திஞர் முதியவரான பிரேம்சந்த்.

''இங்கே இன்னும் எத்தனே நாள் இருப்பீர்கள்?'' என்று கேட்டார் சுதாகர்.

''ஆயிற்று. நாளே இரவு புறப்படுகிருேம்'' என்ருர் பிரேம்சந்த்.

''ஏன் இத்தனே சீக்கிரம்? ஊரையெல்லாம் சுற்றிப் பார்க்கவில்லேயா?''

''இல்லே. இந்த ஏலத்துக்காகத்தான் சென்னே வந்தோம். ஆனுல் எதிர்பாராத விதமாக இப்படி நேர்ந்துவிட்டது.''

''உங்களுக்கு ஸ்டாம்பு சேகரிப்பதில் மிகுந்த ஆர்வம் உண்டு போல் தெரிகிறது. ஆமாம், இங்கே எத்தனே ஸ்டாம்புகள் வாங்கினீர்கள் ஏலத்தில்?'' என்று கேட்டார் ரவீந்திரர்.

''ஏலம்தான் முழுவதும் நடக்கவில்லேயே சார். நாங்கள் நான்கே ஸ்டாம்புகள்தான் வாங்கினேம். அதற்கு மொத்தம் ஆருயிரம் ரூபாய் ஆயிற்று'' என்ருர் பிரேம் சந்த்.

''அப்படியா! அப்பொழுது அவை உயர்ந்ததாக இருக்க வேண்டுமே. நாங்களும் ஏலத்துக்காகத் தான் வந்தோம். நாங்கள் அதைக் கொஞ்சம் தயவு செய்து பார்க்க முடியுமா?''

''அதற்கென்ன காண்பிக்கிறேன்'' என்று கூறிவிட்டு, பிரேம்சந்த் அடுத்த அறைக்குச் சென்ருர்.

ரவீந்தர் அப்பொழுது பகவானுடன் பேச்சுக் கொடுத்தார்.

''அட! இது என்ன, புதிய கடிகாரமா?'' என்ருர், பகவான் கட்டிக்கொண் டிருந்த கடியாரத்தைக் காணபித்து.

''இல்லேயே.... ஓ இதுவா. ஆமாம், இது புதிதுதான். இன்று காலேதான் வாங்கினேன்'' என்ருர் பகவான்.



''அப்போ நேற்று கட்டிக் கொண்டிருந்தது வேறு மாதிரியாக இருந்ததே! அந்தக் கடிகாரம் என்னவாயிற்று? விற்று விட்டீர்களா? மன்னித்து விடுங்கள். நான் கேட்பதைத் தவருக எடுத்துக் கொள்ளக் கூடாது. சும்மா ஏதோ கேட்டேன்'' என்று கூறினுர் ரவீந்திரர். பகவான் திடுக்கிட்டுச் சற்றுத் தயங்கினுர். அதற்குள் பிரேம்சந்த் இதைக் கேட்டுக் கொண்டே வந்தார்.

''அப்படியெல்லாம் இல்லை சார். அந்த வாட்சை நான்தான் அவனிடமிருந்து வாங்கிக் கொண்டேன்'' என்று கூறி முடித்தார் அவர்.

பிறகு இருவருக்கும் ஸ்டாம்புகளைக் காண்பித்தார் பிரேம்சந்த். அப்புறம் ரவீந்திரர் அந்தக் கைக் கடிகாரத்தை வாங்கிப் பார்த்தார்.

பிரேம்சந்த் கூறினுர்: ''இது இப்பொழுது வந்துள்ள புதிய மாடல். இந்தக் கடிகாரத்தில் சிறியதொரு அலாரம் அமைப்பு வேறு இணைக்கப்பட் டிருக்கிறது. வேறு ஒன்றும் புதிதில்லை. ஏன், இந்த ஊருக்கு இது வரவில்லையா?''

''வரவில்லையென்றுதான் நினைக்கிறேன்'' என்று ஒரு பொய்யைக் கூறினுர் ரவீந்திரர்.

''இங்கே இந்த ஸ்டாம்பைப் பாருங்கள். இது தன் தேசத்துச் சிறப்புக்களை எத்தனை அழகாகச் சித்திரிக்கிறது. இந்த இத்தாலிய தேசத்து ஸ்டாம்புகள் எல்லாமே அழகாக இருக்கும். நம் தேசத்திலும் இம்மாதிரியாக வெளியிட்டால் எவ்வளவு நன்ருக இருக்கும்'' என்ருர் சுதாகர். அவர் தன் வசீகரப் பேச்சினுல் அந்த டில்லிப் பிரமுகர்களையும் கவர்ந்து விட்டார்.

அப்பொழுது ரவீந்திரர் கைக்கடிகாரத்தை நன்ருகக் கையில் வைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டிருந்தார். அவர் கைகள் கடிகாரத்தில் நமட்டு விஷமம் செய்து கொண் டிருந்தன என்று கூறினுல் மிகையாகாது! ஆனுல் எல்லாம் ஒரு நிமிஷத்துக்குத்தான். பிறகு அதைத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

பிறகு சிறிது நேரம் பேசிவிட்டு விடை பெற்றுக் கொண்டனர். அவர்கள் அறையை விட்டுச் சிறிது தூரம் வந்த பிறகு ரவீந்திரர் எதையோ மறந்துவிட்டதுபோல் மறுபடியும் திரும்பிச் சென்ருர். முதல் அறையில் பகவான் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது தான் பிரேம்சந்த் இரண்டாது அறைக்குச் சென்றிருந்தார்.

''மன்னிக்கவும். என்னுடைய 'வாக்கிங் ஸ்டிக்'கை மறந்து விட்டேன்'' என்று ரவீந்திரர் கூறி தம்முடைய கைத் தடியை எடுத்துக் கொண்டு கிளம்பினுர்.

''பரவாயில்லை. அதற்கென்ன சார்'' என்ருர் பகவான். ரவீந்திரர் செல்லும் வரையில் பிரேசந்த் அடுத்த அறையிலிருந்து வரவில்லை.

* * *

அன்றிரவு மணி ஒன்றரை. 'பிரதாப் பவனத்தில்' இருள் கவிந்திருந்தது. தெருவிலும் ஜனநடமாட்டம் இருக்கவில்லை. 'பிரதாப் பவனத்'தில் முதல் மாடியில் டில்லிப் பிரமுகர்கள் தங்கியிருந்த பிளாக்கில் இரண்டாவது அறையில் பின்பக்கமாக வந்து மூன்று உருவங்கள் உள்ளே குதித்தன. மறுபடியும் நிச்சப்தம் நிலவியது. இப்படியே அரைமணி நேரம் சென்றது.

''க்ரிங்...ங்..ங்..ங்'' என்று மிகவும் மெல்லிய தொனியில் அந்த அறையில் சப்தம் எழுந்தது. மெதுவாக மூலையில் பதுங்கியிருந்த உருவங்களில் ஒன்று அந்த அறையில் அப்படியும்இப்படியுமாக உலாவியது. எங்கிருந்து அந்தச் சத்தம் மிகவும் தெளிவாகக் கேட்டதோ, அங்கே வந்து நின்றது. ஒரு மூங்கில் குப்பைக் கூடையிலிருந்துதான் சத்தம் வந்துகொண்டிருந்தது. சப்தம் நிற்கும் வரையில் காத்திருந்தது. பிறகு குப்பைக் காகிதங்களைக் கிளறியது அவ்வுருவம். அதிலிருந்து ஒரு கைக்கடிகாரத்தையும் எடுத்தது.

அதே சமயம் பக்கத்து அறையிலிருந்து நான்காவது உருவம் ஒன்று மெதுவாக இரண்டாவது அறைக் கதவுப் பக்கம் வந்து




நின்றது. அதன் கையிலிருந்த ரிவால்வர் கைக் கடிகாரத்தை எடுத்தவரைக் குறி பார்த்தது. பதுங்கியிருந்த மற்ற இரு உருவங்களை அது பார்க்கவில்லை போலும்.

மேலும் தாமதிக்காமல் மூலையிலிருந்த ஓர் உருவம், தன் பக்கத்திலிருந்த ஸ்விட்சைப் போட்டுவிட்டது. பளீரென்று வீசிய மின்சார ஒளி அந்த அறையையே பிரகாசமடையச் செய்தது.

ரிவால்வருடன் நின்றுகொண்டிருந்தது டில்லி பிரமுகர்களில் ஒருவர். அவருக்குச் சிறிது பின்னால் மற்றவரும் நின்றுகொண்டிருந்தார்.

"துப்பாக்கியைக் கீழே போடுங்கள், இருவரும்" என்று துப்பாக்கியுடன் கர்ஜித்தார் இன்ஸ்பெக்டர். ஒளிந்திருந்த கான்ஸ்டேபிள்களும் பிரசன்னமானார்கள். அவருக்குப் பின்னால் சுதாகர். இரு பிரமுகர்களின் கைகளிலும் விலங்கு மாட்டப்பட்டது. கைக்கடிகாரத்துடன் வந்தார் ரவீந்திரர்.

ரவீந்திரர் கைக் கடிகாரத்தின் பின்புறத்தைத் திறந்தார், தன்னிடமிருந்த பேனாக் கத்தியைக் கொண்டு. கடிகாரம் இப்பொழுது பெட்டி மாதிரி திறந்துகொண்டது. ஒரு புறம் கடிகாரத்தின் இயந்திரமும், டயலும் இருந்தன; மற்றொரு புறம் வெண்மையானதொரு தகடு இருந்தது. ரவீந்திரர் அதை ஜாக்கிரதையாகக் கத்தியால் நெம்பி எடுத்தார். அதன் கீழ் இருந்தது, காணாமற்போன ஸ்டாம்பு!

அடுத்த நாள் காலை ரவீந்திரர் சுதாகருக்கு விஷயத்தை விளக்கினார்.

"ஏலத்தின் பொழுது டில்லிக்காரர்களில் தம்பியான பகவான் தோசைக்கல் மாதிரியாகக் கடிகாரமணிந்துகொண்டிருந்தார். நான் அங்கே சென்றதும் இன்ஸ்பெக்டரைத் தெரிந்தது மாதிரியே காட்டிக்கொள்ளவில்லை. அதனால் நாம் இருவரும் யாரோ சாதாரண மனிதர்கள் என்றுதான் டில்லிக்காரர்களின் மனத்தில் பட்டுவிட்டது.

"ஏலம் நடந்துகொண்டிருக்கும் பொழுது மெயின் ஸ்விட்சை அணைத்து, வயரை அறுத்தது பிரேம்சந்த். அப்பொழுது பகவான் ஐயாயிரம் ரூபாய் ஸ்டாம்பு வைத்திருந்த கண்ணாடிக் கேஸுக்கு அருகில் நின்றுகொண்டிருந்தார். ஒரே நிமிஷத்தில் நின்றபடியே கேஸிலிருந்த ஸ்டாம்பை மாத்திரம் அகற்றித் தம் கடிகாரத்துக்குள் வைத்துக்கொண்டுவிட்டார். டில்லிக்காரர்கள் ஸ்டாம்பு வாங்கவே வரவில்லை. விலையுயர்ந்ததைச் சுருட்டிக்கொண்டு போகவே வந்திருந்தனர். பெயருக்காக நான்கு ஸ்டாம்புகளை ஏலத்தில் வாங்கினர். விலை



தகப்பனுர்: கம்பர் பிறந்த இடம் எது? என்ன எழுதினுய்?

கிட்டு: பூ! இது தெரியாதாப்பா கம்பர் லேண்டுதானே!

---

மொத்தம் ஆறுயிரம் ரூபாய் என்றனர் அல்லவா? ஆனுல் ஏலம் நடத்திய கந்தசாமியிடம் விலையை விசாரித்ததில் மொத்த விலை நானூற்றைம்பது ரூபாய் தான் என்று அறிந்தேன். நாம் அவர்களிடமிருந்து திரும்பியதும் கந்தசாமியிடம் காணுமற்போன ஸ்டாம்பின் அளவைக் கேட்டறிந்து கொண்டேன். கடிகாரத்தில் சுலபமாக வைக்கக் கூடியதாகத்தான் அது இருந்தது.

இன்னென்று: பகவான் கையில் அணிந்திருந்தக் கடிகாரம் புதிதா என்று கேட்டதும் அவர் முதலில் தடுமாறினுர். பிறகு புதிது என்றுர். நிஜமாக அதுதான் அவர் உபயோகப்படுத்தும் கடிகாரம். நடுவில் வந்தது இந்தப் புதிய மாடல். பிறகு பிரேம்சந்த் தைரியமாக அதைச் சமாளித்து விட்டார். அப்பொழுதுதான் கடிகாரத்தை நன்ருகப் பார்த்து விட்டு ஒரு காரியம் செய்தேன். சாவி கொடுப்பதற்கு இருந்த திருகுக்கு மேல் அலாரம் வைப்பதற்கு ஒரு திருகு இருந்தது. அதை இரண்டு மணிக்கு அலாரம் அடிக்குமாறு வைத்தேன். அப்படிச் செய்ய அரை நிமிஷம்கூடப் பிடிக்கவில்லை. பிறகு நாம் திரும்பும் பொழுது என் வாக்கிங் ஸ்டிக்கை வைத்ததும் வேண்டுமென்றேதான். திரும்பி அவர்கள் அறைக்குச் சென்றபோது, பிரேம்சந்த் இரண்டாவது அறைக்குச் சென்று பின்னுல் கதவைச் சாத்திக்கொண்டிருந்தார். அதிலிருந்து கடிகாரத்தை இரண்டாவது அறையில் எங்கோ வைக்கிருர் என்று தெரிந்தது. குப்பைக் கூடையில் வைத்தால் ஒருவர் கவனமும் அங்கே செல்லாது என்று வைத்திருக்கிருர்கள். அலாரம் அவர்களை காட்டிக் கொடுத்துவிட்டது.

அவர்களை விட்டுப் பிரிந்ததும் நான் 'ராம்நாத் கடிகார டீலர்' கடைக்குச் சென்று இது மாதிரி ஒரு கடிகாரத்தைத் திறந்து காட்டும்படி கூறினேன். அதனுள் டில்லி ஆசாமிகள் அமைத்திருந்த வெண் தகடு கிடையாது. பிறகு அங்கிருந்து ராமலிங்கம் பிள்ளையிடம் சென்றேன். அவர் ஏன் போலீசுக்குப் பயப்படுகிருர் என்று சாதாரணமாகக் கேட்டேன். அவர் உண்மையைக் கூறினுல் போலீசுக்குத் தெரிவிக்காமல் இருந்து விடுவதாக உறுதி கூறினேன், உண்மையை வரவழைக்க. அவர் உள்ளே சென்று தொலைந்து போயிருந்த ஸ்டாம்பு மாதிரியே ஒன்று கொண்டு வந்தார். அதைக் களவான ஸ்டாம்புடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக எடுத்துக்கொண்டு ஏலத்திற்கு வந்திருந்தாராம். விளக்கு அணைந்ததும் தம்மைச் சோதித்தால் ஆபத்து என்று எண்ணி நழுவி வந்துவிட்டார். நல்ல வேளை, நின்றிருந்தால் கட்டாயம் உண்மைத் திருடர்கள் தப்பியிருப்பார்கள்'' என்று கூறி முடித்தார் ரவீந்திரர்.

''அப்படியானுல் நீங்கள் அவரை அப்பொழுது நம்பினீர்களா?'' என்று கேட்டார் சுதாகர்.

''அப்பொழுது முழுவதையும் நம்பவில்லை; ஆனுல் இப்போது நம்புகிறேன்'' என்றுர் ரவீந்திரர்.



# தேவை...?

தங்கமணி

## 1

சிவப்பனும் கறுப்பனும் ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். இருவருக்கும் கடும் பசி! மேலே நடக்க முடியவில்லை; தள்ளாடினார்கள்; தடுமாறினார்கள். அருகில் ஒரு சிறு குளம். இருவரும் குளத்துக்குச் சென்றார்கள். குளக்கரையில் யாரோ ஒரு வழிப்போக்கன் இறந்து கிடந்தான். அவனருகில் இரண்டு சிறு மூட்டைகள் இருந்தன.

சிவப்பனும், கறுப்பனும் தாவி ஓடினார்கள்: இரண்டு மூட்டைகளையும் பரபரப்புடன் அவிழ்த்துப் பார்த்தார்கள். ஒன்று சோற்று மூட்டை; மற்றொன்று பண மூட்டை!

உடனே, இருவருக்கும் தகராறு ஏற்பட்டது. 'அது உனக்கு, இது எனக்கு' என்று வெகுநேரம் வாக்குவாதம் நடந்தது. கடைசியில், இருவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

சிவப்பன், சோற்று மூட்டையை எடுத்துக்கொண்டு மரத்தடிக்கு ஓடினான். கறுப்பன் பண மூட்டையுடன் நகரத்தை நோக்கி ஓடினான்.

கொஞ்ச காலத்துக்குப் பிறகு—

தன் அழகிய வீட்டுக்கு முன் வந்து பிச்சை கேட்ட சிவப்பனை, அன்புடன் அழைத்துச் சென்று பசியாற்றிய பின், கறுப்பன் சொன்னான்: ''ஒரு வேளைப் பசியைச் சகித்துக்கொள்ள முடியாமல், பல காலச் சந்தோஷத்தை உதாசீனப்படுத்துவது எவ்வளவு மடத்தனம்!..'' இது கறுப்பன் மனத்தை உறுத்திக்கொண்டே இருந்தது.

## 2

சில நாட்களுக்குப் பிறகு, கறுப்பனிடமிருந்து ஓர் இருநூறு ரூபாயை வெகுமதியாகப் பெற்று, அயலூருக்குக் கிளப்பினான் சிவப்பன்.



சில மாதங்களாயின. அயலூருக்குச் சென்ற சிவப்பன், கறுப்பனிடமிருந்து பெற்று வந்த சிறு தொகையை முதலாக வைத்து, ஏதோ ஒரு வியாபாரம் செய்யத் துவங்கினான். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைத்தது. பணம் சேர்ந்தது. சிவப்பன் சிக்கனமாகப் பணத்தைச் சேமித்து வைத்தான். ஒன்றிரண்டு வருஷங்களுக்குள் அவன் பெரும் பணக்காரனானான்! பேரானந்தமாக வாழ்ந்தான்.

சில வருஷங்களுக்குப் பின், சிவப்பனைத் தேடிக்கொண்டு கறுப்பன் வந்தான். அவன் வாடி வதங்கி, எலும்பும் தோலுமாக, கந்தலும் கண்ணீருமாக வந்திருப்பதைக் கண்டு சிவப்பனுக்கு மிகவும் வருத்தமாக யிருந்தது; அவன், கறுப்பனை அன்புடன் அழைத்துச் சென்றான்; பசி ஆற்றினான்; பிறகு, விசாரித்தான்; "கறுப்பா, உன்னிடமிருந்த ஆயிரக் கணக்கான ரூபாய்கள் என்னவாயின..?"

கறுப்பன் கண்ணீர் வடித்துக் கொண்டே கூறினான்: "ஆயிரக் கணக்கான ரூபாய்கள் இருந்துதான் என்ன பலன்? லட்சக் கணக்கான ரூபாய்கள் இருந்துதான் என்ன பிரயோஜனம்? இருந்த பணத்தையெல்லாம் புத்தி கெட்டத்தனமாக, ஊதாரித்தனமாகச் செலவழித்துவிட்டு ஓட்டாண்டியாய்ப் போனேன்!"

இதைக் கேட்டதும் சிவப்பன், மிக வருத்தத்துடன் நெட்டுயிர்த்துவிட்டுச் சொன்னான். "கிடைத்த பணத்தைக் கொண்டு மேலும் சம்பாதிக்க அறிவில்லாதவன், கிடைத்த பணத்தைச் செலவழிக்கவும் தகுதியில்லாதவன்!..."

## 3

காலம் ஓடிக்கொண்டிருந்தது.

சிவப்பனும், கறுப்பனும் இருந்த பணத்தைக் கொண்டு வியாபாரத்தை மேலும் விருத்தி செய்தார்கள். லாபம் வெள்ளமாகப் பெருகியது. இருவரும் பணத்தை மலைபோல் சேமித்து, சிக்கனமாகச் செலவழித்து, சீரும் சிறப்பும் பெற்றுச் சீமான்களாக வாழ்ந்து வந்தார்கள். நகர மக்களிடையே அவர்களுடைய செல்வாக்கு உயர்ந்தது. சில காலத்துக்குள் மக்களின் சார்பாகச் சிவப்பனுக்கு மந்திரி பதவி கிடைத்தது. கறுப்பனுக்கு மேயர் பதவி கிடைத்தது. அந்தஸ்தும், அதிகாரமும் கிடைத்ததும் இருவரும் வெவ்வேறு மாதிரியாக நடந்துகொண்டார்கள்.

மந்திரி சிவப்பன் பணத் திமிரும், பதவிக் கர்வமும் கொண்டு காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டான். மக்களை அடக்கினான். ஒடுக்கினான். வாட்டி வதக்கினான். சுருங்கக் கூறப் போனால், அவன் கொடுங்கோலாட்சி புரிந்த 'ஹிட்ல'ரின் தம்பியானான்.

மேயர் கறுப்பன் பணம், பதவி, புகழ், பெருமை - இவைகளின் பலத்தைக் கொண்டு மக்களுக்கு நன்மையைச் செய்து வந்தான். கூடுமான வரை அவன் காந்தி மகானின் வழியைப் பின்பற்றி வாழ்ந்து 'மக்களின் தொண்டன்' ஆனான்!..

சில காலத்துக்குப் பிறகு சிவப்பனின் கொடுங்கோலாட்சியால் துன்பமடைந்த மக்கள், திடீரென்று கொதித்தெழுந்தார்கள். சிவப்பனை அடித்து உதைத்து நகரத்தை விட்டு விரட்டினார்கள். மேயர் கறுப்பனை மந்திரியாக்கி மகிழ்ந்தார்கள்.

ஒரு நாள், கறுப்பன் தன் அருமை நண்பனான சிவப்பனை நினைத்து வருந்தினான். அப்போது, சிவப்பன் மாறுவேஷமணிந்து அங்கே வந்தான். "என்னை எவ்வாறேனும் காப்பாற்ற வேண்டும்!.." என்று கறுப்பனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினான். கறுப்பன் அவனை அழைத்துச் சென்று பசியாற்றினான். பிறகு, ஆர அமர்ந்து பேசிக்கொண்டிருக்கையில் கறுப்பன் சொன்னான்: "பணமும் பவிசும், அறிவும் ஆற்றலும் மட்டும் இருந்து என்ன பயன்—? அன்பும் அடக்கமும் இல்லையெனில், பணமும் அறிவும் பாலைவனத்தில் பெய்த மழையாக மங்கிப் போகவேண்டியதுதான்!"

# ஏற்ற இடம்

‘நட...து

ஆவணக் காப்பக நூலகம்
211803

ஒரு வீட்டின் திண்ணை மூலையில் ஓர் ஒட்டைக் குதிர் இருந்தது. அது பல இடங்களில் ஒட்டையாகப் போனதால் உபயோகிக்கப் படாமல் இருந்தது. சந்தடியற்ற அந்த இடத்தில் ஓர் எலிக்குடும்பம் வசித்து வந்தது.

தாய் எலியையும் தகப்பனர் எலியையும் தவிர ஆறு குஞ்சு எலிகளும் இருந்தன.

குதிரின் வாய்தான் அவைகளுக்கு வாசல். அங்கங்கே இருந்த சிறிய சிறிய துவாரங்கள்தான் ஜன்னல்கள். சொந்த முயற்சியால் அவை குதிரின் பின்பக்கத்தைச் சுரண்டி ஒட்டை செய்து ஒரு கொல்லைப் பாதையையும் ஏற்படுத்திக்கொண்டன. குதிரின் தலைமேல் வைத்திருந்த சதுரப் பலகை அவைகளுக்கு மொட்டை மாடியாக உபயோகப்பட்டது.

ஒரு நாள் அம்மா எலி தன் குழந்தை எலிகளைக் கூப்பிட்டது. எல்லாம் ஓடி வந்து சுற்றி நின்று கொண்டன.

''குழந்தைகளே! நீங்களெல்லாம் பெரியவர்களாகி விட்டீர்கள். இங்கும் இடம் நெருக்கமாகி விட்டது. அவரவர்கள் இஷ்டமான இடத்திற்குச் சென்று சுயமாகச் சம்பாதித்துச் சாப்பிடுங்கள். நல்ல வீடு கட்டிக் கொள்ளுங்கள். சந்தோஷமாக இருங்கள்'' என்றது.

அங்கே ஒரு மூலையில் கொட்டை ஒன்றை கொறித்துக் கொண்டிருந்த அப்பா எலி அதை நிறுத்திவிட்டு, தன் குஞ்சுகளை நோக்கியது.

''அம்மா சொன்னது ரொம்ப சரி. நீங்கள் எல்லாம் வளர்ந்து விட்டீர்கள். அவரவர் உழை... ப்படுவதுதான் நல்லது. ஒருவருக்கொருவர் தனித் தனியாக இருந்தால்தான் சிநேகமாகவும் இருக்கலாம். இன்றே நல்ல நாள்தான். இருட்டினதும் கிளம்புங்கள்'' என்று அம்மா சொன்னதை ஆமோமதித்துப் பேசியது.

எலிக்குட்டிகள் எல்லாம் மூட்டைக் கட்டுவதில் முனைந்தன. மாலை இருள் சூழத் தொடங்கியதும் ஒவ்வொன்றுகக் கிளம்பின. அப்பா எலியும் அம்மா எலியும் ஒவ்வொன்றையும் ஆசீர்வதித்து அனுப்பிக்கொண்டிருந்தன.

கடைசியாக வந்தது வெள்ளைக் கண்ணன். அதுதான் எல்லாவற்றையும்விட வயதில் சிறியது. அதன் ஒரு கண்ணைச் சுற்றி வெண்மையாக இருந்ததால் எல்லோரும் அதை வெள்ளைக்கண்ணன் என்று அழைத்தனர். அம்மா எலிக்கு அதனிடம் ஆசை அதிகம். அதன் தலையைக் கோதி, ஆசீர்வதித்தது அம்மா எலி. அப்பா எலி தன் முன்னங்கால்களால் தடவிக்கொடுத்து, வாலை ஆட்டி வழியனுப்பியது.

மெதுவாக நடந்து வெளியே வந்தது வெள்ளைக் கண்ணன்.





தெருவில் சுற்று முற்றும் பார்த்தது. மற்ற எலிக்குஞ்சுகள் கண்ணிலேயே படவில்லை. அதற்கு எங்கே செல்வதென்று ஒன்றுமே புரியவில்லை. தன் கையிலிருந்த சிறிய மூட்டையை ஒரு குச்சியிலே மாட்டி, தோளில் வைத்துக் கொண்டு மனம் போனபடி நடக்கத் தொடங்கியது.

கொஞ்சதூரம் நடந்ததும் ஒரு குட்டை தென்பட்டது. அதன் அருகே வந்தது வெள்ளைக் கண்ணு. குட்டை பூராவும் ஒரே பச்சையாக ஆகாசத்தாமரை படர்ந்து கிடந்தது. இடையிடையே மிச்சம் மீதி இருந்த இடத்தை அல்லி இலைகள் மூடிக்கொண்டிருந்தன. பச்சைக் கம்பளம் விரித்தது போலிருந்த அதன் நடு நடுவே வெள்ளையும் சிகப்பும் கலந்த அல்லிப் பூக்கள் தலையை நீட்டிக் கொண்டு நின்றன. அந்தக் காட்சி எலிக்குஞ்சைக் கவர்ந்தது. குட்டையின் அருகே வந்து மூட்டையைக் கீழே வைத்துவிட்டு உட்கார்ந்தது.

''டடடட டட்....டட டட டட்'' என்று ஒரு குரல் வந்தது. தலையைத் தூக்கிப் பார்த்தது எலிக்குஞ்சு. குட்டையின் ஓரத்தில் கிடந்த ஓர் உளுத்த மரத்துண்டின் மேல் உட்கார்ந்திருந்தது, ஒரு பெரிய தவளை.

பிராணிகள் பாஷைதான் பிராணிகளுக்குப் புரியுமே!

''எங்கே போகிறாய், எலிக்குஞ்சே!'' என்று விசாரித்தது தவளை.

''சம்பாதித்துத் தனிக்குடித் தனம் செய்யப் போகிறேன்'' என்றது எலிக்குஞ்சு.

வயதான அந்தத் தவளைக்கு எலிக்குஞ்சினிடம் ஓர் அன்பு தோன்றியது. ''இங்கேயே, என் வீட்டில் வேண்டிய இடமிருக்கிறது. என்னோடு வசிக்கலாம், வாயேன்'' என்றது தவளை.

'இங்கேதான் இருந்து பார்ப்போமே' என்று தோன்றியது எலிக்கு. ''சரி'' என்றது அது. தவளை இருந்த மரத்துண்டிற்குத் தாண்டிக்குதித்தது.

சிறிது நேரத்திற்குள்ளாகவே எலிக்குஞ்சுக்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லை. அங்கு மிங்கும் அது நகர்ந்தபோதெல்லாம், அந்த மரம் அப்படியும் இப்படியும் ஆடியது. குட்டையின் அருகே இருந்ததால் அந்தப் பிரதேசம் பூராவும் ஈரமாகவே இருந்தது. அங்கிருந்து கிளம்பத் தீர்மானித்தது எலிக்குஞ்சு.

''ஐயா! தவளைப் பெரியாரே'' என்று கூப்பிட்டது வெள்ளைக் கண்ணன். ''இந்த மரக்கட்டைத் தவளை வசிப்பதற்கு லாயக்காக இருக்கலாம். ஆனால் என்னைப் போன்ற எலிகள் வசிக்கத் தகுந்ததல்ல. உங்களுக்கு நிரம்ப வந்தனம்'' என்று கூறிவிட்டுத் தன் மூட்டையைத் தோளில் வைத்துக் கொண்டு நடந்தது.

ஓட்டமும் நடையுமாக ஒரு மரத்தடிக்கு வந்து நின்றது எலிக்குஞ்சு.

''குக்கூ குக்கூ'' என்ற குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து ''எலிக்குஞ்சே! எங்கே போகிறாய்?'' என்ற சப்தமும் மரத்திலிருந்து எழுந்தது. அந்த இனிய குரல் எலிக்குஞ்சை மயக்கியது. நிமிர்ந்து நோக்கியது எலிக்குஞ்சு. குயில் ஒன்று மரத்தில் உட்கார்ந்திருந்தது.

''சம்பாதித்துத் தனிக்குடித் தனம் செய்யப் போகிறேன்'' என்றது எலிக்குஞ்சு.

''என்னோடு இருக்கலாம், வருகிறாயா?'' என்று கேட்டது குயில்.

எலிக்குஞ்சு மரத்தை நிமிர்ந்து நோக்கியது. நீண்டு வளர்ந்திருந்த அடிமரத்திலிருந்து ஐந்தாறு கிளை

கள் நான்கு புறமும் பரவியிருந்தன. அடர்த்தியாக இருந்த பச்சை இலைகள் அந்த இடத்திற்கே கூரை போட்டதுபோல் தோன்றியது. அங்கங்கே காய்கள் கொத்துக் கொத்தாகத் தொங்கின. இரண்டு மூன்ருகக் கிளைகள் பிரிந்த இடத்தில் அழகான ஒரு கூடு தெரிந்தது. எலிக்கும் ஆசையாக இருந்தது.

''ஆகா, வருகிறேன்; தங்குகிறேன்'' என்று பதிலளித்தது.

மரத்தின்மேல் ஏறுவதற்குச் சிறிது சிரமப்பட்டது எலிக்குஞ்சு. மெதுவாகக் கூட்டிற்குள் உட்கார்ந்துகொண்டது.

கொஞ்ச நேரத்தில் குயில் நிம்மதியாகக் கண்களை மூடிக் கொண்டது. தன் வயிற்றைக் கூட்டின் நடுவே வைத்து, தலையையும் வாலையும் கூட்டின் இருபுறங்களிலும் வைத்துக்கொண்டு நிம்மதியாகத் தூங்கத் தொடங்கியது குயில்.

எலிக்குஞ்சுக்கு இது புது அநுபவம். என்னவோபோல் இருந்தது. கூடைக்குள் உட்கார்ந்திருப்பதுபோல் தோன்றியது அதற்கு. இடுப்புவரை கூட்டுக்குள் வைத்துக்கொண்டு, இரண்டு முன்னங்கால்களால் கூட்டின் முனையைப் பிடித்து மெள்ள எட்டிப் பார்த்தது. அந்தச் சமயம் ஒரு காற்று அடிக்கவே பறவைக் கூட்டுடன் மரம் அப்படியும் இப்படியும் ஆடத்தொடங்கியது. எலிக்குப் பயமாக இருந்தது.

குயிலைப் பார்த்தது எலி. அது நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தது. ''மரத்திலுள்ள கூடுகள் பறவைகளுக்குச் சௌகரியமாக இருக்கலாம்; ஆனுல் எலிகளுக்கு லாயக்கில்லை'' என்று முணு முணுத்துக் கொண்டது. மெல்லக் கூட்டை விட்டுக் கீழே இறங்கியது. தன் மூட்டையுடன் ஒரே ஓட்டமாக ஓடியது. வெகுதூரம் போன பின் கால்கள் வலியெடுத்தன. ஒரு மரத்தடியில் அப்படியே தூங்கி விட்டது எலிக்குஞ்சு.

காலையில் எழுந்ததும், தன் மூட்டையிலிருந்த ஆகாரத்தில் கொஞ்சம் சாப்பிட்டது. மறுபடியும் நடக்கத் தொடங்கியது. கொஞ்ச தூரம் போனதும் ஒரு பெரிய சாலை குறுக்கிட்டது. அந்தப் பாட்டையிலேயே நடந்தது. வெகு தூரம் நடந்த பின் ஒரு நகரம் காணப்பட்டது. அவ்வளவு பெரிய ஊரை அது பார்த்ததே இல்லை. அதற்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

அங்கும் இங்கும் நடந்து ஒரு பெரிய பங்களாவிற்குள் நுழைந்தது. சமையல் கட்டிலிருந்து அடித்த வாசனை அதன் மூக்கைத் துளைத்தது. மெதுவாகப் பின் கட்டிற்குச் சென்றது. அங்கே மனிதர்கள் நடமாடும் சப்தம் கேட்டதும் பக்கத்திலிருந்த ஒரு அறைக்குள் நுழைந்தது. இருட்டாக இருந்தது அந்த அறை. அங்கே ஏதோ கீழே கிடந்த மாதிரி இருக்கவே, அதன் அருகே சென்று அதையே உற்று கவனித்துக் கொண்டிருந்தது எலிக்குஞ்சு. அந்தச் சுவாரஸ்யத்தில் பின்னுல் நடப்பதைக் கவனிக்கவில்லை.

இயல்பாக உள்ள இயற்கை அறிவினுல் தூண்டப்பட்டு திடீரென்று திரும்பிப் பார்த்தது எலிக்குஞ்சு. அப்படியே நடு நடுங்கிவிட்டது. தன் நீலவிழிகளால் அதையே உற்று நோக்கிக்கொண்டு வெகு அருகே நின்றுகொண்டிருந்தது ஒரு பூனை.

எலிக்குஞ்சு குழம்பிப் போய் விட்டது. என்ன செய்வதென்று



புரியவில்லை. ஒரே ஒரு விநாடி தான்! மறுவிநாடி 'சிட்டாய்'ப் பறந்தது எலி. துள்ளிக் குதித்து ஓடியது. பின்னால் தாவித் துரத்தியது பூனை.

கண், மண் தெரியாமல் ஓடிக்கொண்டே இருந்தது எலி. ''என்னை விட்டுவிடு: இனி இந்தப் பக்கமே திரும்பமாட்டேன்'' என்று கத்திக்கொண்டே ஓடியது எலிக்குஞ்சு. பூனை விடவில்லை. உயிருக்குப் பயந்து ஓடிய எலி மூடிய கதவு ஒன்றின் அருகே வந்தது. எங்கே ஓடுவதென்று புரியாமல் ஒரு விநாடி திணறியது. அடுத்த விநாடி அதிலிருந்து ஒரு சிறிய இடுக்கு வழியே புகுந்து வெளியே ஓடிவிட்டது எலிக்குஞ்சு! பூனையால் அந்த இடுக்கில் நுழைய முடியாமல் நின்றுவிட்டது. தப்பி ஓடியது எலிக்குஞ்சு!

எலிக்குஞ்சு ஓடியது . . ஓடியது . . ஓடிக்கொண்டே இருந்தது. கடைசியாகத் தன் பழைய ஊருக்கே வந்துவிட்டது. ஊரருகே வந்ததும்தான் பயம் தெளிந்தது. ஊரில் தன் வீட்டைப் பார்த்ததும்தான் அதற்குச் சந்தோஷமாக இருந்தது. மனத்தில் நிம்மதி ஏற்பட்டது.

தன் வீட்டிற்குள் நுழைந்ததும் தான் அதற்கு முழு உயிரும் வந்தது. 'இவ்வளவு தங்கமான . . வீட்டை விட்டுவிட்டு எங்கெங்கோ அலைந்தேனே' என்று வருத்தப்பட்டது.

வீட்டிற்குள் நுழைந்தது. வெளியே போன மற்றச் சகோதர சகோதரிகளும் அங்கே வந்திருந்தன. எல்லாம் அப்பா-அம்மாவைச் சுற்றிக்கொண்டு ஆளுக்கொன்றாக ஏதோதோ பேசிக்கொண்டிருந்தன. வெள்ளைக்கண்ணனும் போய்க் கூட்டத்தில் சேர்ந்து கொண்டது.

அந்தக் குதிருக்குள்ளேயே தனியாக ஒரு மூலையில் 'தனிக்குடித்தனம்' செய்யத் தொடங்கியது வெள்ளைக் கண்ணன்.

'தான் இருக்குமிடத்தை விட வெளியே சுகமாக இருக்கும்' என்று நினைப்பதே தவறு என்று தெரிந்துகொண்டது அது.

## எண்ணிலே படங்கள்

1 முதல் 9 வரையில் 'மூட்டை'



# பகவத் கீதா

சுருமீன்

முன்னுரை:

‘உன் வாழ்க்கைச் சரிதத்தை அழகுற எழுதினால் அதுவே ஒரு சிறந்த நாவலாகுமே’ என்று யாரோ ஓர் அறிஞன் கூறினானாம். தற்போது என் அருகில் அவன் இருந்தானானால் வாயில் ஒரு பிடி மிளகாய்ப் பொடியை அள்ளிப் போட்டு விடுவேன். (சர்க்கரை பல்லுக்குக் கெடுதல் என்பது வைத்தியர்களின் தீர்ப்பு!) உதாரணமாக, என்னைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். அன்று முதல் இன்று வரை எனக்கு ஆயிரக் கணக்கான நண்பர்கள் உள்ளனர். அவர்கள் பல்வேறு விதம், பல்வேறு குணம் உள்ளவர்கள். ஆனால் என் சுபாவம் மட்டும் மாறாமல் ஒரேமாதிரியாகவே இருக்கிறது. இந்த நிரந்தரத் தன்மையுள்ள என் சுபாவம் அவர்களுடைய வித்தியாசப் பட்ட குணங்களுக்கு ஒரு உரைகல்லாகி அதை உங்களுக்கும் தெரிவிக்க உதவுகிறதே!

ஆம், நான் ஐந்தாவது படிவத்தில் படித்துக்கொண்டிருந்த போது எனக்கு இரண்டு வலது கைகள் இருந்தன. ஒன்றின் பெயர் கணேஷ், மற்றொன்று ஸ்ரீமான் சங்கரன். ஓர் ஊரில் இரு பணக்காரர்கள். ஒருவன் தனது உழைப்பினால் உயர்ந்து செல்வந்தனானவன். மற்றொருவன் தனது அகடவிகடத்தால் ஊரைக் கொள்ளையிட்டுச் சீமானானவன். ஆனால் பொது இடங்களில் இரண்டு பேருக்கும் மதிப்பு உண்டு. அதுபோல் இந்த இரு வலது கைகளும் பரீக்ஷையில் நல்ல மார்க் வாங்கிவிடுவார்கள். சங்கரன் தன் சாமர்த்தியத்தினால், எப்படியோ நான் போடப்போவதாகச் சொன்ன மிளகாய்ப் பொடியைக் கொஞ்சம் பரீக்ஷை ஹால் சூபர்வைஸர்களின் கண்களில் போட்டுவிட்டு, காப்பி அடித்துவிடுவான்!

அவனது சுபாவம் எனது நட்பைச் சிறிதும் பாதிக்கவில்லை. ஆனால், நான்மட்டும் அவனை எச்



சரிக்கை செய்வேன், "டேய். ஜாக்கிரதையாக இருடா. எக்கச் சக்கமாக ஏதாவது நடந்துவிட்டால் சர்டிபிகேட்டில் அல்லவா ரிமார்க்கு செய்து விடுவார்கள்!" என்று. ஆனால் அவன் பதிலோ, "போடா, போ; எல்லாம் எனக்குத் தெரியும் என்பதுதான்."

ஒவ்வொருவனும் தன் சாமர்த்தியத்தைக் காண்பிக்க வேண்டிய ஆண்டுத் தேர்வும் வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது. நானும் கணேஷும் படிப்பில் முழு மூச்சுடன் இறங்கிவிட்டோம். ஒரு நாள், சற்றுச் சிரம பரிகாரம் எடுத்துக் கொள்வதற்காக சங்கரனின் வீட்டிற்கு அரட்டை யடிக்கப் புறப்பட்டோம்.

அங்கே நாங்கள் கண்ட காட்சி...?

அமைதியாக ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண் டிருந்த அவனது கையில் கூரான கத்தரிக்கோல்; மேஜையின்மேல் தையல் பிரிக்கப்பட்டு ஏடு ஏடாக இருந்தது ஆங்கிலப் பாடப் புத்தகம். எங்களைக் கண்டவுடன் ஒரு குறுநகை அவன் முகத்தில் தவழ்ந்து ஓடியது. நிதானமாகத் தன் வேலையிலேயே ஈடுபட் டிருந்தான் அவன்.

'சித்தார்த்தரும் அன்னமும்' என்ற ஆங்கிலப் பாட்டின் ஒரு குறித்த பகுதியைக் கிழித்தெடுத்துக்கொண்டான் அவன். இது போல் இன்னும் சில எதிர்பார்க்கப்பட்ட பகுதிகள். இவ்விஷயத்திலும் தன் புத்திசாலித்தனத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டான் என்பது பின்னால் நடந்த விஷயத்தில் புலப்பட்டது.

பின்பு காரியங்களை முடித்துக்கொண்டு அரட்டை மகாநாட்டுக்கு விஜயம் செய்தான் அவன். எனக்கும் கணேஷுக்கும் அவன் நிதானத்தைக் குறித்து ஒரே திகைப்பு.

'வருகிறேன், வருகிறேன்' என்று பராக் கூறிக்கொண்டு வந்தே விட்டது பரீக்ஷை. காலையில் ஆங்கிலம் முதல் பேப்பர். நாங்கள் அநேகமாக எதிர்பார்த்த கேள்விகளே வந்திருந்ததால் அச்சமின்றிப் பேனாவை உதறிவிட்டு விடைத்தாளில் உழத்தொடங்கினோம். உட்காரும் வரிசை சங்கரனுக்குச் சாதகமாகவே அமைந்துவிட்டது. முதல் வரிசை நான்காவது பெஞ்சில் அவன். ஐந்தாவதில் நான். சங்கரனுக்கு நேர் முன்னால் கணேஷ்.

ஆங்கிலப் பேப்பரோ, புதிய முறை கேள்வித்தாள். ஆதலால் ஏகப்பட்ட பக்கங்களுடன் ஒரு சிறிய புஸ்தகமாகவே விளங்கிற்று. தான் கொண்டுவந்திருந்த பேப்பரில் ஒன்றை அதன் நடுவில் வைத்தான் சங்கரன். பிறகு கேட்க வேண்டுமா? கேள்விகளைப் பார்த்து ஆலோசிப்பது போல் ஒரு முறை திரும்புவான்; பின்பு எழுதத் தொடங்குவான். நெடு நாளையப் பழக்கமல்லவா?

ஒரு வழியாகத் தன் சொந்தப் பொறுப்பில் நகல் எடுத்தவுடன் புதுமுறைக் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கினான்.

அது அவனுக்குச் சற்றுக் கஷ்டமான வேலை. ஒரு வார்த்தைக்கு நான்கு பொருள்கள் கொடுத்து ஒன்றைப் பொறுக்குவது. சற்று நேரம் யோசித்த அவன் சூபர்வைஸரைப் பார்த்தான். அவரோ வேறு திக்கில் தம் கவனத்தைச் செலுத்திக் கொண் டிருந்தார். ஒரே கணத்திலும் கோடியில் ஒரு பங்கு நேரம்.

'சர்ரக்' என்ற மெல்லிய சப்தம். தனது கேள்வித்தாளை முன் பெஞ்சில் தள்ளிவிட்டு அதே வேகத்தில் கணேஷின் தாளைத் தனதாக்கிக் கொண்டுவிட்டான் அவன்.

நானோ, இவ்வளவையும் வியப்புடன் விடை எழுதுவதைக்கூடச் சற்றுநேரம் நிறுத்திவிட்டுக் கவனித்துக்கொண் டிருந்தேன்!

அமைதியாக மேலும் சில நிமிஷங்கள் கழிந்தன.

"ஸ்டாண்ட் அப்!" என்ற கடுமையானக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டேன். அது என்னை நோக்கி அல்ல; கணேஷை நோக்கித்தான். அவன் எழுந்திருந்தான்.

எனக்கு விஷயம் புரிந்து விட்டது.



'ஆம், தற்செயலாக எல்லாரையும் பார்த்து வந்த பரிசோதகர் கணேஷிடமும் வந்திருக்கிறார். விதி வசத்தால், அவனது கேள்வித்தாளைப் புரட்டியிருக்கிறார். 'சட்டப்படி' நிரபராதி குற்றவாளியானான். எனக்கோ ஆத்திரமாக இருந்தது. இருவரும் என் நண்பர்கள்தான். ஆனால் தற்போது சங்கரனை என் பரம விரோதியாகக் கருதிவிட்டேன்.

''ஸார்!'' என்று அழைத்தேன். அதற்குள் கணேஷின் கண்களும் என்னுடையதும் கலந்துவிட்டன. அவற்றில் ஏதோ மர்மமும் கண்டிப்பும் உட்காரும்படி என்னைக் கட்டளையிட்டன. நிலைமையை நாம்தான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்று எண்ணிய நான் முயற்சியினின்று ''டங்கர்க்'' செய்தேன்.

''என்ன வேண்டும்?'' என்ற பரிசோதகரின் குரல் என்னை உலகிற்குக் கொணர்ந்து சேர்த்தது. ''வாட்டர் ஸார்!'' என்று என் உதடுகள் முணமுணத்தன,

மேலே காரியங்கள் தொடங்கிவிட்டன. கணேஷ் பரீக்ஷை ஹாலினின்று வெளியேற்றப் பட்டான். அவனோ வாயைத் திறக்கவில்லை. சங்கரன் இடித்த புளி மாதிரி அமர்ந்திருந்தான். என் மனமோ ஆறாக ஓடிக்கொண்டிருந்தது. 'வெளியே அழைத்துச் செல்லப்படும் கணேஷைத் தடுக்கலாமா?' என்றுகூட எண்ணிவிட்டேன்.

ஒன்றும் என் கையிலில்லையே!

கணேஷ் பாதி பரீக்ஷைதான் எழுதினான் முடிவில். தலைமை ஆசிரியரிடம் கடுமையான தண்டனை எதிர்பார்க்கப் பட்டாலும் அவர் தண்டனையை சற்று ஒத்தியே போட்டுவிட்டார். அவனது தோற்றம் அவ்வளவு பரிசுத்தமாக இருந்தது. முகத்தில் ஒரு உறுதி பளிச்சிட்டது. குற்றம் செய்திருக்கிறவனுக்குத் தேவையான அச்சம், பார்வை, கலவரம் ஒன்றும் அவனிடம் தெரியவில்லை.

''உன் வகுப்பு ஆசிரியரிடம் உன் நடத்தையைப் பற்றிக் கேட்ட பின்பே மேல் நடவடிக்கை எடுக்கப் போகிறேன்'' என்று கூறிவிட்டார் அவர்.

இடைவேளையும் வந்துவிட்டது. நாங்கள் திடுக்கிடும் வண்ணம், கணேஷைப்பற்றி என் ஆசிரியர் கோபத்தில் மிகமிகத் தாழ்வாகத் தம் அபிப்பிராயத்தை தெரிவித்துவிட்டார். ஒரே நம்பிக்கை. அதுவும் தகர்ந்துவிட்டது.

தலைமை ஆசிரியர், ஒரு கடுமையான கடிதத்தைக் கணேஷின் தந்தைக்கு எழுதி உறையிலும் இட்டுவிட்டார். ''நாளை முதல் நீ பரீக்ஷைக்கும் வரவேண்டாம்'' என்று கூறிவிட்டார். இதுவரை தேக்கிவைத்திருந்த அழுகை பீரிட்டது. அவன் அழுவதைப் பார்க்க எங்களுக்கெல்லாம் கவலையாகவும் பரி



*விச்சு:* எட்டுப் பாலம் ஒரு கஜம்; மூணு அடி ஒரு மரக்கால்; நாலு மரக்கால் ஒரு பர்லாங்....

*நண்பன்:* டேய்..டேய்.... என்னடா இது?

*விச்சு:* அட சும்மா இருடா! தாத்தாவுக்கு காது செவிடு. படிக்காத போனால் தொண தொணன்னு ஏதாவது சொல்லுவார். அதுக்காக ஏதோ கத்திக்கொண் டிருக்கேன்!

—பி. கே. சாமி.

---

தாபமாகவும் இருந்தது. சங்கரனோ ஒருவர் கண்ணிலும் அகப்படவில்லை. மாலைப் பரீக்ஷை மட்டும் கணேஷ் எழுதுவதற்கு அநுமதி கொடுத்திருந்தது எவ்வளவு நல்லதாகி விட்டது. மாலையிலேயே தம் பிரம்பையும் உபயோகிப்பதாகத் தீர்மானித்திருந்தார் சட்டமும் படித்திருந்த எனது தலைமையாசிரியர்.

அவரும்தான் என்ன செய்ய முடியும்? தமக்குக் கிடைத்த ருஜுக்கள் கணேஷைக் குற்றவாளியாக்கி விட்டனவே.

நானும், வகுப்பிலும் பள்ளியிலும் மதிப்பு வாய்ந்த வேறு சில மாணவர்களும் குறிப்பிட்ட பரீக்ஷாதிகாரியிடம் சென்றோம்.

"உண்மையில் குற்றவாளி கணேஷ் இல்லை, ஸார். வேறு ஒரு பையன்தான் அதன் சொந்தக்காரன். அவன் தனது கேள்வித் தாளை, கணேஷினுடையதற்குப் பதிலாக மாற்றிவிட்டான். விடை எழுதுவதில் ஈடுபட்டிருந்த கணேஷால் அதைத் தடுக்கவோ கவனிக்கவோ முடியாமல் போய் விட்டது. விஷயம் தெரிந்திருந்தால் நீங்கள் அவனை நெருங்குமுன்பே புஸ்தக ஏட்டை மறைத்திருக்க மாட்டானா?'' என்று நாங்கள் எடுத்துக் கூறினோம்.

"உங்கள் வகுப்பு ஆசிரியரே அவனைப் பற்றிக் குறை கூறுகிறாரே, உங்கள் பேச்சைமட்டும் எவ்வாறு நம்புவது?'' என்று கேட்டார் அவர்.

"அவர், தம் காதுக் கெட்டிய செய்தியில் ஏற்பட்ட கோபத்தில் தான் அவ்வாறு கூறியிருக்கிறார். அப்படியே யானாலும், எங்களைப் பற்றித் தயவுசெய்து அவரிடம் கேட்டுப் பாருங்கள்'' என்று நான் பதிலளித்தேன்.

ஓர் அதிகப் பிரசங்கிப் பையன், "கேள்வித்தாளை மாற்றிய நிகழ்ச்சியைக் கவனித்திருந்திருக்கலாம், ஸார். கணேஷ் குற்றவாளியாகவே இருந்தாலும்கூட அவன் தன்னிடமிருந்து குறித்த அச்சுத்தாளை கேள்விப் பேப்பரினுள் வைத்ததை நீங்கள் நிச்சயம் கவனித்திருக்க வேண்டும்'' என்றான்.

"குற்றம் சாட்டப்பட்டவுடனே அவனே ஏன் இவ்விஷயத்தையோ அல்லது உண்மைக் குற்றவாளியைப் பற்றியோ கூறியிருக்கக் கூடாது?'' என்று 'கிராஸ்' செய்தார் அவர்.

"தலைமை உபாத்தியாயர் எப்படியாவது உண்மையைப் புரிந்து கொள்வார் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு, ஸார். தாங்கள் கூறியவாறு, உண்மையை அவன் வெளியிட்டிருந்தால் பள்ளிக் கூடத்திற்கு வெளியே அந்தப் பையனிடமிருந்து தாக்குதலை எதிர்பார்க்க வேண்டும்'' என்றோம்.

உண்மையில், நட்பின் மீதுள்ள பாசம்தான் இதற்குக் காரணம் என்று எங்களுக்குத் தெரியாதா?

''பேப்பர் மாற்றியவனைக் கூற முடியுமா?'' என்றார் அவர்.

''எங்களுக்கேன் ஸார், அந்த வம்பு? நீங்கள் கண்டுபிடித்த பையன் குற்றவாளியல்ல. அவ்வளவுதான் நாங்கள் கூற முடியும்'' என்று 'கணி'ரென்று அந்தப் பையனே பதிலளித்தான்.

வந்த கோபத்தை அடக்கிக் கொண்ட அவர், ''ஏன் டயத்தை வீண் செய்கிறீர்கள்? மாலைப் பரீக்ஷைக்குப் படித்தாலும் பயனுண்டு'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

முயற்சிகள் வீணானது குறித்து நாங்கள் மனமிடிந்து போனோம். அச்சுத்தாள் செய்த சதியல்லவா? கையால் எழுதப்பட் டிருந்தால் கையெழுத்தைக் கொண்டு கணேஷ் குற்றவாளியல்ல என்று நிரூபித்திருக்கலாம். இங்கேதான் சங்கரனின் முன்னெச்சரிக்கை புலப்பட்டது.

விஷயம் இத்துடன் முடிந்து விட்டதாகவே நாங்கள் எண்ணினோம். ஆனால் முடிந்திருந்தது முதல் அத்தியாயம்தான். மறு நாள் பரீக்ஷைக்குக் கணேஷும் வந்திருந்தான்!

எங்கள் வேண்டுகோள் பரிசோதகரைத் தூண்டிவிட்டது என்பது இப்போதுதான் எங்களுக்கு விளங்கியது. அவர் கணேஷை விடுவிக்க முயற்சி செய்துவிட்டார்..!

தன் கண்பார்வையின் காரணத்தைக் கணேஷ் விளக்கியதன் காரணம் இதுதான். ''குற்றம் செய்யாதவன் தண்டனையடைய மாட்டான் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. சங்கரனைக் காட்டிக் கொடுத்திருந்தால், அறியாது பிழை செய்தவனுக்கு வீண் தண்டனையும் எனக்கு நட்பின் நஷ்டமும் ஏற்பட்டிருக்கும். எப்படியானாலும், ஆசிரியர் அவனுக்கு அளித்திருக்கக் கூடிய தண்டனையைவிட என் செய்கை சங்கரனை நிச்சயம் மாற்றி விட்டதென நான் உறுதி கூறுகிறேன்.''

பள்ளிக்கூடப் பியூன் ஒரு சிறு கடிதத்தை என்னிடம் கொடுத்துச் சென்றான்.

''காப்பியடித்து நூறு மார்க்கு வாங்குவதைவிட உழைப்பின் மூலம் முப்பது மார்க்கு வாங்குவது எவ்வளவோ மேல் என்று உணர்ந்தேன்.

—சங்கரன்.''

மலைக் கோட்டையினின்று எழுந்த கம்பீரமான மணி நாதம், ''தவறிழைத்தவன் உணர்ந்து மன்னிப்புக் கேட்டால் மன்னிக்கப் படுகிறான்'' என்ற கண்ணனின் வாக்கை எடுத்து வந்தது.

---



## அதிருஷ்டப் பறவை!

நான்கு திசைகளிலிருந்தும் நான்கு பறவைகள் நடுவில் கிண்ணத்திலுள்ள பழத்தை எடுத்துசெல்ல வருகின்றன. கோட்டின் வழியே சென்று ஒன்றுதான் வெற்றி காண்கிறது. அந்த அதிருஷ்டப் பறவையைக் கண்டுபிடித்துச் சொல்' பார்ப்போம்.

# தெனாலி ராமன்

**சம்பந்தம்**

அன்று நேரில் வந்தால் உதவி செய்வதாகச் சொல்லிவந்த ராஜகுரு, இன்று, 'யார் நீ? எனக்குத் தெரியவே தெரியாதே!' என்று சொன்னால் எப்படி யிருக்கும் தெனாலிராமனுக்கு! மிகவும் மனம் நொந்துகொண்டான். ஆனால் மறுநாளே, தன் சுய முயற்சியினாலேயே அரண்மனையின் விகடகவியாகிவிட்டான்.

ஆனால் முதல் வேலையாய், அந்த நய வஞ்சக ராஜகுருவை எப்படியும் அவமானப்படுத்தித் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தான் தெனாலிராமன். அதற்காக அந்த ராஜகுருவைப் பற்றி அப்பொழுதே நிறைய விசாரித்துத் தெரிந்து வைத்துக்கொண்டான்.

மறுநாள் அதிகாலை கோழி கூவின வேளையில் துங்கபத்திரா நதிக்குக் குளிக்கச் சென்ற ராஜகுருவைப் பின்தொடர்ந்து அவருக்குத் தெரியாமல், தெனாலி ராமனும் சென்றான். அங்கே அவர் வழக்கப்படி தாம் உடுத்திருந்த துணிகள் அனைத்தையும் அவிழ்த்துக் கரையில் வைத்துவிட்டு ஆற்றில் இறங்கினார். அதுவரை ஒளிந்துகொண் டிருந்த தெனாலி ராமன் வெடுக்கென்று ஓடிவந்து அந்தத் துணிகளை எடுத்துக் கொண்டுவிட்டான்.

சாவகாசமாக நீராடிவிட்டுக் கரையேறிய ராஜகுரு, அங்கே அவருடைய துணிகளைக் காணாது திகைத்துப்போனார். ஆனால் அவ்விடத்தில் தெனாலிராமனல்லவா நின்றுகொண் டிருந்தான்! உடனே விஷயம் விளங்கிவிட்டது, ராஜகுருவுக்கு. ''ஆ! தெனாலிராமா! என் துணிகள் எங்கே?'' என்று மிகுந்த வெட்கத்துடன் கேட்டார்.

''என்ன! என்ன! இப்பொழுது என் பெயர் நினைவுக்கு வந்துவிட்டதா! அன்று பேட்டிக்கு வந்த பொழுது என்னைத் தெரியவே தெரியாதென்று சொன்னாயே?'' என்று சீறிவிழுந்தான் தெனாலி ராமன்.

''என் துணிகளைக் கொடுத்துவிட்டுப் பேசேன்'' என்றார் ராஜகுரு. அவர் குரல் கம்மியது.

''உன் துணிகளா? நான் பார்க்கவேயில்லையே! இப்படி இடுப்பில் சிறு துணிகூட இல்லாமலா குளிக்கச் சொல்கிறது உன் அறிவு!' என்றான் தெனாலி ராமன்.

''நீ எது சொன்னாலும் கேட்கிறேன், ராமா. தயவு செய்து சீக்கிரம் என் துணிகளைக் கொடுத்துவிடேன். இதோ வெளிச்சமாகிறது பார்'' என்று கெஞ்சினார்.

''இதோ பார். சொன்ன சொல் தவறக்கூடாது. என்னைத் தோளில் சுமந்து கொண்டு அரண்மனை வரை செல்லவேண்டும்; தெரியுமா?'' என்று சொல்லி அவர் துணிகளை விட்டெறிந்தான். அவசர அவசரமாக உடுத்துக் கொண்டு விதியே என்று தெனாலி ராமனைத் தோளில் சுமந்துகொண்டு அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார் ராஜகுரு.

அதற்குள் நன்றாகப் பொழுது விடிந்துவிட்டது. வழி நெடுக ஜனங்கள் அதைக் கண்டு சிரித்தார்கள்; கை தட்டினார்கள். ராஜகுருவின் முகமோ அவமானத்தினால் சுருங்கி விட்டது.

இவர்கள் அரண்மனையை நெருங்கிக்கொண் டிருந்தபொழுது, மேல் மாடத்திலிருந்த மன்னன் கிருஷ்ண தேவராயன் அதைக்கண்டு மிகுந்த கோபங் கொண்டான். நம் அரண்மனை ராஜகுருவுக்கு இத்துணை அவமதிப்பா என்று துடித்தான்.



உடனே அங்கிருந்த இரு சேவகரைக் கூப்பிட்டு ஏதோ சொல்லியனுப்பினான்.

ராஜகுருவின் தோளின் மீதிருந்தே, அதைக் கவனித்துக் விட்டான் தெனாலிராமன். ஒருவாறு அரசருடைய உத்தரவு எதுவாக இருக்கும் என்பதைத் தெரிந்துகொண்டான். உடனே தொப்பென்று தோளினின்று கீழே குதித்து, ராஜகுருவின் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். "ஆ! என்ன அபசாரம் செய்தேன் நான். மேலான ராஜகுருவிடத்தில் இப்படி நடந்துகொண்டு விட்டேனே!" என்று கண்ணீர் விட்டான். "உங்களை இப்பொழுது என் தோளின்மீது சுமந்தால்தான் என் மனசு நிம்மதியடையும்" என்று சொல்லிக்கொண்டே, வெடுக்கென்று ராஜகுருவைத் தோளில் தூக்கிக்கொண்டு நடந்தான் தெனாலிராமன். பாவம்! அவன் வார்த்தைகளை முற்றிலும் நம்பினார் ராஜகுரு.

அதற்குள் அரண்மனையிலிருந்து ஓடிவந்த இரண்டு சேவகர்களும், ஒன்றும் விசாரிக்காமல் தோளின் மீதிருந்த ராஜகுருவைக் கீழே இழுத்துத் தள்ளி நையப்புடைத்தார்கள்.

"ஆ! ராஜகுரு அல்லவா நான்! என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு!" என்று கத்தினார் அவர். "அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. தோளின் மீதிருந்தது நீர் தானே? அப்புறம் என்ன, மன்னன் கட்டளைப்படிதானே நாங்கள் நடக்கவேண்டும்?" என்று சொல்லி, சேவகர்கள் மீண்டும் அவரை நையப் புடைத்து, தெனாலிராமனை மாத்திரம் அரசனிடம் அழைத்துச் சென்றார்கள்.

'ஆ! இவனைப் புள்ளைப் பூச்சி என்று எண்ணினேனே. கொடிய விஷத்தேளாக அல்லவா இருக்கிறான் இவன்!' என்றெண்ணிக் கண்ணீர் உகுத்தார் ராஜகுரு: அந்தச் சமயம் தெனாலிராமன் உள்ளம் விழுந்து விழுந்து நகைத்துக் கொண்டிருந்தது. அரசன் கட்டளை என்ன; நடந்தது என்ன; இதன் முடிவு என்ன என்ற விவரங்களை அடுத்த சந்திப்பில் பார்ப்போம்.




## குன்றிமணி

சின்னஞ் சிறிய குன்றிமணி
சிவப்பும் கறுப்பும் சேர்ந்தமணி
பொன்னை நிறுக்கப் போடுமணி
போகும் வழியில் கண்டமணி. (1)

வேலிக் கொடியின் மேலேறி
விளங்கும் அழகுக் குன்றிமணி
சோலைப் பறவை செம்போத்தின்
சுழலும் கண்ணைப் போன்றமணி. (2)

வெளியே பார்க்க நல்லவராய்
விஷமே நெஞ்சில் உடையவராய்ப்
பழகும் மாந்தர் பலருண்டு
என்பது காட்டும் கல்விமணி! (3)

—ரா. ராஜகோபாலன், மகராஜபுரம்.

கதை: ஆர்வி

# புலிக்குட்டி

சித்திரம்: ஸாமி




ஓடுங்கள்! உயிர் மீது ஆசையிருந்தால் திரும்பிப்பாராமல் ஓடுங்கள்! உம்!
அவர்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடுவதைப் பார்த்துவிட்டு, அந்தப் பெண் அருகில் வந்து . . . . . . . . . .
பெண்ணே! என்னை யாரென்று சொன்னாய்?
அவள் அவன் அருகில் நெருங்கிப் பார்த்துவிட்டு . . . . . . . . . .
நீங்கள் என் அத்தான் மதுராந்தக இளவரசர்...
ஹஹ்ஹா! ஹஹ்ஹா!
இளவரசர் மதுராந்தகன் இல்லை. அவனுடைய குல எதிரி!
அப்படியானால் அபராசிதவர்மன் குமாரியா நீ?


நீ அரசனுக்கு எதிரி என்றால், நானும் அவர்களில் ஒருத்திதானே!
அதில் என்ன சந்தேகம்?
முண்டக்கண்ணா! நீங்கள் போகலாம். நான் இவளைக் கொண்டு பத்திரமாக விட்டுவிட்டு வருகிறேன்!
சரி; உத்தரவு
எதிரியின் பெண் என்றால் இரக்கம் காட்டுவானேன்?
ஒரு பெண் எனக்கு எதிரியாக மாட்டாள்! ஆபத்தில் உனக்கு உதவுவது தான் என் கடமை!
ஆகா! இவனுடைய வீரத்தைப் போலவே இவனுடைய பேச்சும் அழகாக இருக்கிறது!

(தொடரும்)

# எங்கள் யோசனைகள்

அன்பு மிகுந்த ஆசிரியர் அவர்கட்கு!

வணக்கம்

எங்கள் அபிப்பிராயங்களை எடுத்துரைக்க எங்களுக்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக முதலில் மனமார்ந்த நன்றி. நான் பலருடன் கலந்து ஆலோசித்தே, இந்த அபிப்பிராயங்களைத் தெரிவிக்கின்றேன்.

1. சிறுவர்களின் அபிமானப் பத்திரிகையான கண்ணனை வாரப் பத்திரிகையாக வெளியிட வேண்டுகிறேன். இதற்கு முக்கிய காரணம் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கான அம்சங்கள் கண்ணனில் அநேகம் இடம் பெறுகின்றன. இது போன்ற அம்சங்களை அதிக அளவில் சீக்கிரமாக அடைந்து பயன் பெறுவதற்கு ஒரே வழி இதுதான்.

2. இரண்டாவதாக, என்னைப் போன்ற அநேக குழந்தைகள் தங்கள் அறிவு வளர்ச்சியைப் பெருக்கும் வினாக்களைத் தங்களிடம் வினவி, முன்போல விடை பெற விரும்புகின்றனர். ஆகையால் நாங்கள் இதற்குத் தனி இடம் வகுத்துத் தருமாறு கேட்கின்றோம். இதனால் பல்லாயிரக் கணக்கான குழந்கைள் பயன் பெறுவார்களல்லவா?

3. நீங்கள் பேனா நண்பர்கள் என்ற பகுதியைத் தொடர்ந்து நடத்த வேண்டும். அந்தப் பகுதி எங்களிடையே மிகுந்த உறவை உண்டு பண்ணுகிறது. பேனா நண்பர்கள் தொடரில் பேனா நண்பர்களுக்கு விலாசமிடும்போது ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டியுள்ளது. உதாரணமாக, 'சென்னை' என்பது தமிழ்ச் சொல். இதனை ஆங்கிலத்தில் எழுதுவதாய் இருந்தால் 'Madras' என்றே எழுத வேண்டும். வெளியூர்களில் வசிக்கும் எங்களுக்கு, இது எப்படித் தெரியும்? ஆதலால் விலாசங்களை மட்டும் ஆங்கிலத்தில் பிரசுரித்தால், எம் போன்ற வெளியூர்க் குழந்தைகளுக்கு தொடர்பு கொள்ள மிகவும் உதவியளிக்கும்.

தங்களன்புள்ள,

ப. கோபாலகிருஷ்ணன், கம்பளை (இலங்கை)

ஐயா,

1-8-56 இதழில் எங்கள் கருத்துக்களைக் கேட்டிருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி. கதை, கதையாய், ஒரே அடிச்சுவட்டில் எழுதப் பெறும் கதைகளைத் திணிப்பதால் பயனில்லை. அது மட்டுமல்ல; வளருகின்ற நாங்கள் வெறும் கதைகளை மட்டும் படிப்பதால் பயனில்லை. நாங்கள் தாகத்தோடு அலைகிறோம். அந்தத் தாகத்திற்கு வெறும் நீர் மட்டும் போதாது, அதனுடன் பழரசமும் தந்தால் ஆனந்தமாக அருந்துவோம். அயல்நாட்டிலும் சரி; நம் நாட்டிலும் சரி; குழந்தை இலக்கியத்திற்கு அல்லும் பகலும் பாடுபடும் அறிஞர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நாங்கள் அறிய வேண்டும். அது மட்டுமல்ல அயல் நாட்டுச் சிறுவர் பத்திரிகைகளோடும் நீங்கள் தொடர்பு கொண்டு எங்களுக்கு அவர்களை நேரடியாய் அறுமுகப்படுத்த வேண்டும். நம் நாட்டில் பழங் காலத்தில் எத்தனையோ அரும்பெரும் வீரர்கள் இருந்தார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் சரித்திரச் செப்பேடுகள் கூற மறுத்து விட்டன போலும். நீங்களாவது அவர்களைப் பற்றிய விவரங்களை ஆர்வத்தோடு நிற்கும் எங்களுக்கு அறிவிப்பீர்களானால் தமிழ்நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கும் பெரும் பணி செய்தவராவீர்கள். இதனால் இதழின் விலை அதிகரிப்பினும் கவலையில்லை.

வி. ஆர். சௌரிராஜன் (ராஜா) நாமக்கல்

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS (PRIVATE) LTD., MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

அற்புதமாகத் தயாராகிறது!

குழந்தைகள் மகிழும்

# கண்ணன் தீபாவளி மலர்

**ஆறு ஆண்டுகளாக ஈடு இணையற்ற**
**மலர் என்று புகழ்பெற்றது**

மற்ற விவரங்களை எதிர்பாருங்கள்

## டில்லியில் சுதந்தர தினம்



சரித்திரப் பிரசித்தி பெற்ற செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நேருஜி மாபெரும் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகிறார்.

(Regd. as a News Paper in Ceylon) Reg. No. M. 5542

# கண்ணன் வெளியீடுகள்

**லீடர் மணி - ஆர்வி** 1 8 0

இளைய தாயாரின் கொடுமைகளுக்கிடையே கிராமத்தில் பள்ளிப் படிப்பை முடிக்கிறான் மணி. மேலே படிக்கப் பக்கத்து நகரத்திலுள்ள அத்தை வீட்டுக்குச் செல்கிறான். அங்கேயும் அவர்கள் கொடுமை தாங்காமல் நடு இரவில் வெளியேறி விடுகிறான். வழியில் நண்பனாக வரும் கங்கன் ஆசை காட்டி அவனைச் சென்னைக்கு அழைத்துச்சென்று நடுத்தெருவில் விட்டுச் செல்கிறான். பலவித இன்னல்களையும் சமாளித்த வாறே விடாமுயற்சியுடன் நன்றாகப் படித்து வெற்றி பெறுகிறான். லீடர் பட்டம் பெற்ற அவனை விமான நிலையத்தில் அனைவரும் வரவேற்கிறார்கள். படிக்கப் படிக்கத் தெவிட்டாத கதை. சுவையான சம்பவங்கள். சிறுவர் ஒவ்வொருவரும் படித்து அநுபவிக்க வேண்டிய ரஸமான நாவல்.

**அசட்டுப் பிச்சு - ஆர்வி** 1 0 0

ஏ. பி. என்ற பையனை ஊரில் உள்ள மற்ற நண்பர்கள் அசட்டுப் பிச்சுவாக்கி விடுகிறார்கள். அவன் நடையும் உடையும் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால் அவன் அதிருஷ்டமோ அளவிட முடியாமல் இருக்கிறது. பெரிய பெரிய திருட்டுக்களையெல்லாம் அநாயாசமாகக் கண்டு பிடித்து விடுகிறான் அவன். பெயரும் புகழும் அவனைத் தேடி வருகின்றன. அடுக்கடுக்கான சம்பவங்களும் அழகான சம்பாஷணைகளும் நிறைந்த அருமையான கதை.

**அபாயச் சங்கு - நீலம்** 0 8 0

விஷமக் கொடுக்கான ரகுவை, பட்டணத்துக்கு அனுப்பினால் அடங்கிவிடுவான் என்று நினைக்கிறார்கள். ஆனால் புறப்பட்ட ரெயிலிலேயே முதலில் தன் கைவரிசையைக் காட்டுகிறான் அவன். பள்ளிக்கூடத்தையே இரண்டு செய்கிறான். அவனைக் கண்டால் தெருவே நடுங்குகிறது. ஆனால் கடைசியில்.. சுவாரஸ்யமும் விறுவிறுப்பும் நிறைந்த கதை.

**கலைமகள் காரியாலயம், சென்னை-4.**